

Oosai ROMANTIC HERO

March 2011

ATA
PUBLICATION

வாசகர்களின் இதயத் துடிப்பு

# அலை ஓசை

இதழ் 01

**FREE ISSUE**





சங்கடமான சமையலை விட்டு .....

- பக்கம் 08

UK இல் உயர் கல்வி

- பக்கம் 10


அழகு வாய்ந்த
மலர்கள்தானே நீங்கள்!
உங்கள் அழகு மலரட்டும் ....
Ram Bros
SINCE 1967
No: 140, Main Street, Colombo 11, Sri Lanka.
Tel: 011 232 0127, 011 244 7698
Email: rambros@eurek




G.T.V. Enterprises (Pvt) Ltd.
Cargo Services
Importers Exports, Food Producers Forwarding & Clearing Agents Cargo Services to all Countries by Air & Sea, Courier Service, Sri Lankan Airlines Cargo Agent
Call
011 - 465 - 4444
For Our courier Services
No: 18/3, Dr. E.A Cooray Mawathta, Colombo 06.
Tel: 011 2360926, 011 2559849 Fax: 011 2 631 139
Email: gtvcourier@yahoo.com

# Contents


| | |
|---|---|
| Textile Shopping | 1, 16, 21 |
| Travels & Tours | 27 |
| IT Solutions | 5, 23 |
| Education | 7, 11, 12, 22 |
| Beauticians | 18 |
| Domestics | 9 |
| Courier Service | 2 |
| Media | 32 |
| Children's Creations | 24 |
| Education Article | 10, 13, 22, 23, 27 |
| Entertainment Article | 4, 15, 26 |
| Astrology | 14 |
| Business | 6 |
| Literature | 20 |
| Science & Technology | 5 |


**எம் இதயத்திலிருந்து .......**

இவ்வரிய அலை ஓசை உலகெங்கும் ஓசையை ஒலிக்கத்தொடங்கியிருக்கும் காலமிது. அதன் முதற்கட்டமாக முதல் நூல் இலங்கையில் சில பகுதிகளில் வெளிவரத்தொடங்குகிறது. இவ் அலை ஓசை தனது மழலையை இலங்கையிலுள்ள பிரபல வர்த்தகர்கள், மற்றும் பலரின் உதவியுடன் நடைபயின்று சர்வதேசரீதியில் தமிழர்கள் வாழும் பிரதேசத்திலும் நடைபோடவுள்ளது. அதன் அடுத்தகட்டமாக ஐரோப்பிய நாடுகளில் இதன் ஓசை ஒலிக்க இப்பொழுது உதவியாக உள்ளவர்கள் தொடர்ந்தும் துணையிருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்நூலில் சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோருக்கும் ஏற்ற வகையில் ஆக்கங்களுடன் இந் நூல் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. சிறுவர்களை ஊக்குவிக்கும் ஆக்கங்கள், பல்கலைக்கழக மரணவர்களின் ஆக்கங்கள் வரவேற்க்கத்தக்கது. சிறப்புவாய்ந்த ஆக்கங்களுடன் விளம்பரங்களினையும் இருந்த இடம் தேடி வந்து உங்களை மகிழ்விக்கின்றது அலை ஓசை.

அலை ஓசை வெளிவர விளம்பரம் தந்து உதவிய அனைத்து நிறுவனங்களுக்கும் எமது மனம்கனிந்த நன்றிகளையும் எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**ATA Graphics**
No. 33 -1/1, Srimaha Bhodi Road, Dehiwala, Sri Lanka.
T: 011 720 7989 M: 077 4939756 / 077 2464684
E: sanjay@ataeducon.com



# பெண்களே!

## திருமணத்திற்குப்பின் படிக்க விரும்புகிறீர்களா?

**வேண்டாம். படித்த பெண்களே என்மீது கோபம் கொள்ள வேண்டாம். பொறுமையாக இதை படியுங்கள் அப்புறம் சொல்லுங்கள் உங்கள் கருத்தை**

90% பெண்கள் திருமணத்தின் பின்னர் அவர்களால் தாங்கள் நினைத்தபடி தங்களது கல்வி, வேலை, மேற்படிப்பு, பதவியுயர்வு, சாதனை ஈட்டுவதில் முழுமையான கவனத்தினை செலுத்த முடிவதில்லை. 10% பெண்கள் தமது இலக்கினை அடைந்திருக்கின்றார்கள்.

ஆம் அதில் உண்மையுள்ளது பெண்ணிற்கு குடும்பத்தேவையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களைக் கூட அவர்களால் செய்து முடிக்க முடிகின்றது ஆனால் சமூகத்தின் பார்வையில் இருந்து மட்டும் தப்பித்துக் கொள்ள முடிவதில்லை. வீட்டுத் தேவையினை பிள்ளைகளைப்பராமரித்தல், அவர்களது கல்வியில் கவனம் செலுத்துதல், பெற்றோர், கணவனைக் கவனித்தல் இவற்றினை செய்து முடித்தால் கூட அவர்களால் படிக்க முடிவதில்லை.

திருமணத்ததின் முன்னர் அவர்கள் படிப்பில் மட்டும் தங்களது கவனத்தினை ஈடுபடுத்தி படித்து பட்டம் பெற்று தமது இலக்கினை அடைகின்றனர். திருமணத்தின் பின்னர் அவர்கள் முன்னேற்றம் ஏனோ நத்தை வேகமாகின்றது.


படிக்க விரும்பும் பெண்கள் திருமணத்தின் முன்னர் படிக்க வேண்டியதை செய்து முடிக்கவேண்டிய பட்டங்களை செய்துமுடிக்க முயற்சியுங்கள்

பெற்றோருடன் இருக்கும் போது படிக்கும் படிப்புத்தான் 75% பெண்ணிற்கு நிலைக்கிறது. அப்புறம் 25% நிகழ்தகவுதான்.

ஆகவே நான் சொல்வது படிக்க, சாதிக்க வேண்டியவற்றை திருமணத்திற்கு முன்னர் செய்யுங்கள். உங்களிற்கு வரும் கணவர் உங்களிற்கு ஒத்தாசையாக இருந்தாலும கூட ஏனோ முடிவதில்லை.

ஏற்றுக்கொள்ள முடியாவிடின் நீங்களே சில படித்த பெண்களின் நாளேட்டை புரட்டிப்பாருங்கள். இந்த ஆய்வில் அகக்காரணிகள் புறக்காரணிகள் என்று வேறுபடுத்தி இரண்டும் தாக்கம் செலுத்துகின்றது.







"உங்கள் நிழல்"

# வானில் வண்ணங்கள் தோன்றினால் பூமிக்கு ஆபத்தா?

சூரியவெப்பக் காற்றின் மூலம் வானில் தோன்றும் பல்வேறு வண்ணங்களால், பூமிக்கு ஆபத்து ஏற்படலாம். அதிலிருந்து தப்பிக்க வழி என்ன என விஞ்ஞானிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

சூரியனின் வெப்ப அளவு 1750 ம் ஆண்டிலிருந்து விஞ்ஞானிகளால் அளவிடப்பட்டு வரைபடமாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு 11 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனின் வெப்பம் உச்சத்தில் இருப்பதாக, கணக்கெடுப்புகள் உறுதி செய்துள்ளன. தற்போது 23ஆவது முறையாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில், சூரியன் மிக அமைதியாக இருப்பதாக படங்கள் தெரிவிக்கின்றன. 11 ஆண்டில் முதல் ஐந்தாண்டுகள் மிதமாகவும், ஆறாம் ஆண்டிலிருந்து வெப்பத்தால் ஏற்படும் சூரியகாற்றின் அளவு உச்சமாகவும் இருக்க வேண்டும். கடைசியாக 2001ல் சூரியக்காற்று அதிக உச்சத்தில் இருந்தது. தற்போது நடக்கும் 23வது சுற்றில் 2005 முதல் 2009 ஆண்டு வரை சூரியன் அமைதியாக இருக்கிறது. எனவே 24வது சுற்றில் சூரியன் மூலம் பேரழிவு ஏற்படும் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

சூரியனிலிருந்து வெளிப்படும் வெப்பமானது பேராற்றலாக சூரியனிலிருந்து பொங்கி பரவும். இவை சிலநேரங்களில் 50 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு "பிளாஸ்தப" எனும் எரிமைலை குழம்பு போல பரவும். ஆனால், சூரியனிலிருந்து விடுபட முடியாமல் அதைச் சுற்றி வட்ட வளையமாக மாறி விடும். இதிலிருந்து வெளியேறும் வெப்பமான சுவாலை நிரம்பிய காற்று (சேலார் வின்ட்) பூமியை தாக்க முற்படும். பூமியின் அமைப்பே இயற்கையாக நம்மை பாதுகாக்கின்றது. பூமியில் உள்ள மின்காந்த கோளம் (மாக்னடோ ஸ்பியர்) சூரியகாற்று பூமிக்குள் வராமல் தடுக்கிறது. கடந்த 150 ஆண்டுகளில் பூமியின் வலிமை 10 சதவிதம் குறைந்துவிட்டது. இதனால் சூரியகாற்று பூமிக்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளது. அவ்வாறு ஊடுருவினால், அவை மின்சாரத்தை நேரடியாக பாய்ச்சக்கூடிய அளவுக்கு ஆபத்தானவை. அவ்வாறு ஏற்படுவதற்கு முன், வானம் மிக வெளிச்சமாகவும், இரவில், அதிகாலையில் பச்சை, நீல வண்ணங்களும் தெளிவாக தெரியும்.

கடந்த 1989ல் கனடாவின் "கியூபெக்" பகுதியில் இவ்வகை மின்சாரம் (ஜீரோ கரண்ட்) பாய்ந்து "டிரான்ஸ்பார்மர்" செயலிழந்து. அப்பகுதியில் பச்சை, நீல வண்ணங்கள் (ஆரோரா) காணப்பட்ட பிறகே, இச்சம்பவம் நிகழ்ந்தது. தற்போது புவியின் மின்காந்த கோளத்தின் பலவீனமடைந்த பகுதி வழியாக சூரியகாற்று ஊடுருவியுள்ளது. வரும் 2012. டிச. 21ம் திகதி, 24வது முறையாக 11ஆண்டு சுழற்சி ஆரம்பிக்கிறது. கடந்த செப்., 2010ல் எடுக்கப்பட்ட படங்களில், சூரியனின் பேராற்றல் அதிகமாகி உள்ளதாக தெரிகிறது. எனவே பூமிக்கு மிகப்பெரிய பேரழிவு ஏற்படும் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வானில் வெளிச்சம் அதிகமாகி, வண்ணங்கள் தோன்றினால் சூரிய சுனாமி ஏற்படும் வாய்ப்புள்ளது. சூரியனின் வெப்பகாற்று நேரடியாக பூமியை தாக்கும் போது முதலில் "டிரான்ஸ்பார்மர்கள்" தான் பாதிக்கப்படும். இவற்றை சரிசெய்ய பல மாதங்களாகலாம். இதனால் தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்படும். இரவில் இருளின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும். முக்கியமாக மனிதநேயம் குறைந்து விடுவதால், சண்டை, சச்சரவுகளாலும் அழிவு ஏற்படும். கடலில் மீண்டும் சுனாமி உருவாகும்.

36ம் பக்கம் பார்க்க....

Wholesale & Retail Dealers in all kind of Computer and Laptop Accessories

EPG Technologies
The Complete Computer Shop

**EPG Starter**
Intel Atom 1.6HZ Cpu
Intel D945 System Board
Kingston DDR2 1GB Ram
320GB Hard Disk Drive
Samsung DVD Writer
PS2 Keyboard
USB Optical Mouse
Stereo Speakers
ATX 450W Tower Case
For Cash: Rs.23,000/=
Rs. 2,300/- x 12
FREE 4GB Kingston Pen Drive
3 YEARS WARRANTY

**EPG Power**
Intel Core i32.83GHZ
Intel DH55Hc System Board
Kingston DDR3 2GB Ram
500GB Hard Disk Drive
Samsung DVD Wrier
USB Keyboard M/M
USB Option Mouse
USB Stereo Speakers
ATX 450W Tower Case
For Cash: Rs. 45,000/=
Rs. 4,390/= x 12
FREE 8GB Kingston Pen Drive
3 YEARS WARRANTY



Call: 0114 36 90 60

Kingston Technology Committed to Memory · Kaspersky lab · hp invent · intel · ViewSonic

EPG Technologies | No. 72, Galle Road, Dehiwala. (South). Tel: 011 2737976 Email: info@epgtec.com




சந்தை தந்திரோபாயம் நிறுவனத்தின் சக்தியினை, வளத்தை விரிவாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமான தொன்றாகும். சந்தை தந்திரோபாயம் விற்பனையினை அதிகரிப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாது Targeted Market என்ற நிலையினை அடைய வழிவகுக்கும். சந்தை தந்திரோபாயம் உற்பத்தி அபிவிருத்தி, Promotion, Distribution, விலைநிர்ணயம் (Pricing) ஏனைய முகாமைத்துவங்களோடு இணைந்திருக்கும் தன்மை, நிறுவனத்தின் சந்தை இலக்கினை இனங்காணுதல் அதனை அடைவதற்கு என்ன யுக்தியினை உபயோகித்தல் என்ற விடயங்களினை கவனத்தில் கொள்ளல் வேண்டும். சிறப்பாக எக்காலப்பகுதியில் இதனை நடை முறைப்படுத்துதல் என்ற விடயங்களும் கவனத்தில் கொள்ளவேண்டும். சந்தை தந்திரோபாயம் வரை விலக்கணப் படுத்துகையில் சரியான சந்தைத்தெரிவு, சந்தையின் நிலை, சந்தைக்கலப்பு, வள ஒதுக்கீடு என்பவற்றினை சரியான வகையில் நெறிப்படுத்துகையில் சந்தையானது வெற்றிகரமான நிலையினை அடையும் எல்லாவகையான ஒன்றிணைக்கப்பட்ட தந்திரோபாயத்தின் காரணமாக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல், வாடிக்கையாளர்களை கவர்ந்திழுத்தல் எல்லாஉள்ளடக்கமும் நல் நிலையடைதல், போட்டியாளர்களை எதிர் கொள்ளல், இவ்வாறான சந்தையின் எல்லா வகையான இலக்கினை அடையக்கூடியதாக இருக்கும். சந்தையிலே எண்ணற்ற போட்டியாளர்கள் காணப்படுகின்றார்கள் அவர்கள் தங்கள் தங்களிடையே இலாபத்தினை ஈட்டுவதில் போட்டியிடுகின்றார்கள். இதன் காரணமாக சந்தையிலே போட்டியாளர்களின் செலவு அமைப்பினை இனங்காணுதல் அவர்களது இலாப வளத்தினை அறிதல், போட்டித்தன்மையினை அறிதல், பொருள்வேறுபடுதல், சந்தை அபிவிருத்தி போன்ற காரணிகளினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாடிக்கையாளர்கள் நிறுவனத்தின் முக்கியமான வருமான வளம் ஆகும். இதனால் சந்தைத்திட்டமிடலை சிறந்த முறையில் மேற்கொள்ளல் வேண்டும். உதாரணம் விலைகுறைந்த உற்பத்திப் பொருட்கள் வாடிக்கையாளர்களை கவரும் இந்த இடத்தில் விலைக் குறைப்பினை மட்டும் கவனத்தில் கொள்ளாது. higher margin products and service ஆக இருக்கவேண்டும். விலை, தரம், போட்டியாளர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு திட்டமிடவேண்டும். சந்தை ஒன்றி நல்ல நிலையில் அபிவிருத்தி அடைவதற்கு நல்ல சந்தைதந்திரோபாயம் தேவைப்படுகின்றது. சந்தைபற்றிய ஆராய்ச்சி என்பதிலே சந்தையின் அளவு, சந்தையின் தரம் என்பவைபற்றிய புள்ளிவிபரவியல் ரீதியான ஆராய்ச்சி பரிசோதனை ரீதியான நுட்பங்கள், அவதான ரீதியான நுட்பங்கள், அறிதல் முக்கியமானதாகும்.

சந்தையின் அமைவிடம் என்பது முக்கியமான நாடும் சந்தை அமைந்துள்ள இடம் அதற்கான போக்குவரத்து வசதிகள், நுகர்வோர் விருப்பு, அவர்களது வருமான மட்டம், என்பவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நுகர்வோரின் விருப்பு மாற்றமடைந்து கொண்டிருக்கும் ஒன்று அதேவேளை புதிய போட்டியாளர்கள் சந்தையில் நுளைந்தவண்ணம் இருப்பதனால் சந்தை பற்றிய ஆராய்ச்சி முக்கியமான தொன்றாகும். நீண்டகாலத்தில் அதன் விரிவாக்கம், வளங்கள் என்றவகையில் திறமை, ஊளியர்கள் சொத்துக்கள், நிதி தொடர்பாடல்கள், வசதிகள் போன்றவற்றினை சரியானவகையில் திட்டமிடவேண்டும். சமூகங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனவே இந்த தந்திரோபாய முடிவு ஒரு நிறுவனத்தின் இலபத்தினை ஈட்டுவதில் முக்கியமானதாகும்.


Study in UK
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் IELTS இன்றி ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.
O/L
தகைமை
போதுமானது
APPLY NOW
March/ April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட Visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
5) அனைத்து கட்டணங்களும் After Visa
6) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
7) ஒரு மாதத்தில் பயணம்
தலைநகரில் அதி கூடுதலான விசாக்கள் பெற்றுகொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.
EXPONET
Overseas Consultants
Colombo: 379-1/2, Galle Road, Colombo 06.
Jaffna: 102-2/2, Navalar Road(Luxman Plaza Building), Jaffna.
Fax: 0117 55 55 17 Email: exponetpv t@yahoo.com
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
Colombo: 0117 55 55 11, 0117 55 55 14 Jaffna: 0217 53 83 95

# சங்கடமான
# சமையலை
# விட்டு ....

சமையல் என்பது ஒவ்வொரு வீட்டிலும் நாளாந்தப் போராட்டம். வெப்பம், தீ, புகை, கரிபடர்ந்த பாத்திரங்களோடு தினமும் போராட வேண்டி இருக்கிறது. நாளுக்கு நாள் உயரும் எரிவாயுவின் விலை, எரிவாயு சிலிண்டர்களை எடுத்துச் சென்று எரிவாயு நிரப்பும் வேலை என்பன சமையலை மேலும் சங்கடமாக்குகிறது. இன்னும் சில வீடுகளில் விறகு அடுப்புகளுடன் படும்பாடுகள் சொல்லில் அடங்காது. இதைவிடுத்து மின்சார அடுப்பை பயன்படுத்த நினைத்தால் மின்சார விலைப் பட்டியல் (Current Bill) எம்மை பயமுறுத்தும். இந்த சங்கடத்திற்கு சரியான தீர்வு இந்த நவீன விஞ்ஞான உலகில் இல்லையா? இந்த கேள்விக்கான பதில் இருக்கிறது என்பது தான். அப்படி என்றால் அது என்ன?

**அது தான் Induction Cooker, என்று அழைக்கப்படும் புதுமையான மின்காந்த அடுப்பு. Induction Cooker (மின்காந்த அடுப்பு) என்றால் என்ன?**




இது ஒரு புதுமையான மின்சார அடுப்பு. மின்சார சக்தியை குறைவாகப் பயன்படுத்தி, சமையல் செய்வதற்கு அதிகமான வெப்பத்தை வழங்குகிறது.

## இது எவ்வாறு தொழிற்படுகிறது?

இந்த மின்காந்த அடுப்பில் (Induction Cooker) முலாமிடப்பட்ட செப்புக்கம்பி சுருள்கள் இருக்கிறது. (Copper Coil). இந்த சுருள்களின் ஊடாக மாறுபடும் மின்சார ஓட்டம் (Ossicating Current Flow) செலுத்தப்படும் போது அந்த செப்புச்சுருளில் இருந்து மாறுபடும் மின்காந்த அலைகள் (Ossicating Current flow) பிறப்பிக்கப்படுகின்றது. இந்த மின்காந்த அலைகள் அடுப்பின் மீது வைக்கப்பட்டுள்ள இரும்புக்காந்த பாத்திரங்களின் (ferro magnative pot) (உதாரணமாக - இரும்புப்பாத்திரம், steel பாத்திரம், எவர்சில்வர்ப்பாத்திரம்) ஊடாக செல்லும் போது வெப்பத்தை பிறப்பிக்கிறது. ($I^2R$).

இங்கு நன்றாக உற்று நோக்கும் போது வெப்பமானது பாத்திரத்தின் அடிப்பகுதியில் பிறப்பிக்கப்படுகின்றது, அடுப்பில் அல்ல. இவ்வாறு பாத்திரத்தின் அடிப்பகுதியில் பிறப்பிக்கப்படும் வெப்பமானது அப்பாத்திரத்துடன் தொடுகையில் உள்ள உணவிற்கு கடத்தல் முறை மூலம் பரவுகின்றது. இதனால் பிறப்பிக்கப்படும் வெப்பம் முழுவதும் சமையலுக்கு உபயோகமாகிறது. இதன் போது அடுப்போ, பாத்திரத்தின் மேற்பகுதிகளோ, சூழலோ வெப்பமடைவதில்லை. இதன் காரணமாக நாம் பாவிக்கும் மின்சாரசக்தியில் 95% ஆனது சமையலுக்கு பயன்படுகின்றது.

## வாழைக்காய் தோல் ஸ்டார் ஃப்ரை

### ஸ்ரார் சமயல்

**தேவையானவை**

வாழைக்காய்த் தோல் துண்டுகள் முழு வாழைக்காயை நன்றாகக் கழுவி, முழுசாக வேகவைத்து, சிறிது சதையுடன் தோல் சீவிய துண்டுகள்) ஒரு கப், வேக வைத்த உருளைக்கிழங்கு - 2, நறுக்கிய வெங்காயம் கால் கப், மிளகாய்த்தூள் - தலா ஒரு டீஸ்பூன், பூண்டு பல் - 8, கறிவேப்பிலை, எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை**

வேக வைத்த உருளைக்கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கவும், இதனுடன் வாழைக்காய் தோல் துண்டுகளை சேர்த்து உப்பு: வெங்காயத்தைப் போட்டு வதக்கி... மிளகாய்த்தூள், தனியாத்தூள், இஞ்சி விழுது, பூண்டு சேர்த்துப் புரட்டவும், பிசிறி வைத்திருக்கும் வாழைத் தோல், உருளைக்கிழங்கு துண்டுகளை இதில் போட்டு வதக்கவும். சிறிது சிறிதாக எண்ணெய் சேர்த்து ரோஸ்ட் ஆகும் வரை வறுக்கவும். மொறுமொறுப்பாக வந்ததும், கறிவேப்பிலை கிள்ளி போட்டு இறக்கவும்.

# மின்காந்த அடுப்பில் (Induction Cooker) உள்ள நன்மைகள்.

- இந்த அடுப்பில் சமையல் செய்யும் போது மிக விரைவாக சமையல் செய்ய முடியும். இதன் மூலம் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு சமையல் செய்வதற்கான நேரம் சரி பாதியாக (50%) குறைகின்றது.

- இவ் அடுப்பில் சமையல் செய்வதற்கான செலவானது மிகவும் குறைவு, சாதாரணமாக இலங்கையில் அநேகமான வீடுகளில் எரிவாயு அடுப்பே பாவிக்கப்படுகிறது. இந்த எரிவாயு அடுப்புடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது செலவு சரி பாதியாக (50%) குறைகின்றது.

- இவ் அடுப்பில் இருந்து சூழலுக்கு வெப்பம் இழக்கப்படுவதில்லை, இதனால் சமையல் செய்பவரின் உடல் வெப்பத்தினால் பாதிக்கப்படுவதில்லை. அத்துடன் குளிரூட்டப்பட்ட அறையிலும் (A/C Room) கூட இதனை பயன்படுத்தலாம்.

- இந்த அடுப்பிலிருந்து புகை வெளிவருவதில்லை, பாத்திரங்கள் கரிப்பிடிப்பதில்லை.

- இவ் அடுப்பு மிகவும் பாதுகாப்பானது. தீக் காயங்கள், மின் ஒழுக்கு என்பன ஏற்படாது. ஏனெனில் நாம் சமையல் செய்யும் போது அடுப்போ, பாத்திரத்தின் மேற்ப்பகுதியோ வெப்பம் அடைவதில்லை. இதனால் சிறுவர்கள் உள்ள இடங்களிலும் பயன்படுத்தலாம்.

- இந்த அடுப்பில் உள்ள தானியங்கி ஆளிகள் (Automatic buttons) பால், சூப் (Soup), அரிசி (Rice) நீர் போன்றவற்றை நீங்கள் அருகில் இல்லாமலே சமையல் செய்து தரும்.

- இது மிகவும் பாரம் குறைந்தது. இதனால் இதனை நாங்கள் செல்லும் இடங்களிற்கு இலகுவாக எடுத்துச்செல்லலாம். அத்தோடு இது பார்ப்பதற்கு மிகவும் அழகானது.

- இந்த அடுப்பை ஆன் (on) செய்து விட்டு நாம் மறந்தாலோ அல்லது இரண்டு மணிநேரம் தொடர்ச்சியாக அடுப்பு வேலை செய்துகொண்டிருந்தாலோ தானாகவே இது off ஆகிவிடும். இதன் காரணமாக இந்த அடுப்பு மிகவும் பாதுகாப்பானது.

- இந்த அடுப்பில் எமது சமையலிற்கு ஏற்றவாறு வெப்பத்தை கூட்டிக் குறைத்து பாவிக்க முடியும்.

இந்த மின்காந்த அடுப்பில் இருந்து பிறப்பிக்கப்படும் மின்காந்த அலைகளால் உடலுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. ஏனெனில் சாதாரணமாக வீடுகளில் உள்ள மின்சாரக்கம்பிகளின் ஊடாக மின்சாரம் பாயும் போது அதனை சூழ மின்காந்த அலைகள் உள்ளது. அது மட்டுமல்லாமல் நாம் நாளாந்தம் பாவிக்கும் மின்விசிறி, மின்மோட்டர் என்பவற்றிலும் மின்காந்த அலைகள் உண்டு.

இது இப்பொழுது தான் இலங்கை போன்ற வளர்முகநாடுகளின் மக்கள் கைக்கு எட்டும் விலைக்கு தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்த மின்காந்த அடுப்பானது (Induction Cooker) இலங்கையிலும் பெரும் வரவேற்பை பெற்று தற்போது பெருமளவு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

இந்த மின்காந்த அடுப்பை இலங்கைக்கு இறக்குமதி செய்து அறிமுகப்படுத்திய ஏகவிநியோகஸ்தர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் AP KITCHEN LAPTOP™ நிறுவனத்தினர்.

No. 368/1, Galle Rd, Wellawatte,
Colombo 06. Tel: 0112 364696
E-mail: kitchenlaptop@sltnet.lk




1 Year Warranty
+ 2 Years Service Warranty

Hotline: 0772 35 95 35

**AP KITCHEN LAPTOP™** Induction Cooker
No. 368/1, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 2364696, 011 4255565 E-mail: kitchenlaptop@sltnet.lk



UK Student Visa என்ற கனவுடன் தமது விசா பயணத்தை ஆரம்பிக்கும் மாணவர்களை பணம் என்ற மாயைக்குள் அகப்பட்டுள்ள சில முகவர்கள் தவறான வழிநடத்தலுக்கு உட்படுத்தி செலுத்தவேண்டிய Course fee ஐ விட அதிகமாக அவர்களிடம் பெற்றுவிட்டு ஏமாற்றுகின்ற நிலையில் எமது மாணவர்களின் நலன் கருதி தற்போதய UK Student Visa பற்றிய சில தெளிவான விளக்கங்களைத் தரலாம் என நினைக்கிறேன்.

# UK STUDENT VISA

**1. தற்போதுள்ள UK Student Visa நடைமுறை என்ன?**

சாதாரண மாணவன் ஒருவன் தனது Qualifications (O/L, A/L, Degree, etc..) உடன் UK பல்கலைக்கழகம் ஒன்றிலோ அல்லது கல்லூரி ஒன்றிலோ அனுமதி பெறுவதன் மூலம் 30 புள்ளிகளைப் பெற்றுக் கொள்வார். UK இல் தமது படிப்பிற்குரிய அனைத்து செலவுகளையும் நிறைவுசெய்யக்கூடிய Bank Balance ஐக் கொண்டிருந்தால் 10 புள்ளியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் 40 புள்ளிகள் பெறும் ஒரு மாணவனின் கடந்தகால Immigration History சாதகமானதாக அமைந்தால் Student Visa பெற்றுக்கொள்வதில் எந்தவித தடையும் இல்லை.

**2. O/L உடன் மட்டும் UK Student Visa விற்கு Apply பண்ண முடியுமா?**

ஆம், ஆனால் சில வரையறுக்கப்பட்ட பாடநெறிகளை மட்டும் O/L மாணவர்கள் கற்கமுடியும்.

**UK Student Visa - Call**
**077 4939756**

**3. O/L உடன் மட்டும் இருந்தும் ஆங்கிலத்தில் சித்தியடையாத மாணவர்கள் Apply பண்ண முடியுமா?**

ஆம், அவர்களும் apply பண்ணமுடியும்.

**4. A/L இல் ஒரு பாடம் மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் apply பண்ணமுடியுமா?**

ஆம்.

**5. Degree உடன் உள்ள மாணவர்கள் O/L இல் English சித்தியடையாத நிலையில் அவர்கள் Post graduate level பாடநெறிகளிற்கு Apply பண்ண முடியுமா?**

ஆம்

**6. Student Visa வில் UK செல்லும் மாணவர்கள் வேலை செய்வதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஒன்றாக உள்ளதா?**

ஆம், அவர்களது பாடநெறிகளுக்கேற்ப வேலை செய்வதற்கான அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக ஆங்கிலம், Certificate Level or diploma level பாடநெறிகளைக் கற்கச் செல்லும் மாணவர்கள் வாரத்தில் 10 மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்யமுடியும். Degree Level or Postgraduate Level மாணவர்கள் வாரத்தில் 20 மணித்தியாலங்கள் வேலை செய்ய முடியும்.

**7. Student Visa வில் செல்லும் மாணவர்கள் தமது Spouse, Children ஐ Dependent ஆக தம்மோடு கூட்டிச்செல்லமுடியுமா?**

ஆம், UK இல் அவர்களது செலவுகளை நிறைவு செய்யக்கூடிய Bank Balance இருக்குமானால் தம்முடனே அவர்களை கூட்டிச்செல்லமுடியும்.

**8. முழுமையான Course Fee செலுத்தும் ஒரு மாணவன் தனது Bank Balance ஆக எவ்வளவு வைத்திருக்கவேண்டும்?**


குறைந்தது 1.5 Million போதுமானது, இருந்த போதிலும் இந்த பெறுமதி மாணவர்கள் கற்க போவது London City க்கு உள்ளேயா (inner London) or வெளியேயா (Outer London) என்பவற்றிலும் தங்கியுள்ளது.

**9. சற்று விளக்கமாக கூறமுடியுமா?**

ஆம், முழுமையான Course Fee செலுத்தும் மாணவன் London இற்கு உள்ளே கற்க செல்லுவானாயின் அவன் தனது Bank Balance ஆக £ 7200 ற்கு அதிகமாக வைத்திருக்க வேண்டும்.

ATA | ATA Aspirations (Pvt.) Ltd.
Destination of Dreaminess

# Study in UK
## Is it Your Next Step?
www.londoncollegewimbledon.co.uk







London College Wimbledon is a widely accredited further and higher education institution located 20 minutes from central London. It delivers top quality professional courses, which lead to internationally recognized qualifications in English, Law, Computing, Business and Tourism. The standards of education and student support at LCW meet the rigorous expectations of its prestigious accrediting bodies including the British Council and the British Accreditation Council as well as partner organisations like Leeds Metropolitan University.

## LEADING TO MBA Courses

# Spot Admissions
**15, 16, 17th April 2011**

- English
- Law and Conveyancing
- Computing and Technology
- Travel Tourism and
- Hospitality Management
- Business and Management
- Accounting and Banking

**Venue** : **Hotel Green grass**
**Conducted by** : **Vishal**
**Time** : **10.00 am to 4.00 pm**



**Address** : ATA Aspirations (Pvt). Ltd.
No: 33, 1/1, Sri Maha Bhodi Road,
Dehiwala, Sri Lanka.
**Tel** : 011 720 7989

**Mobile**
077 4939756
**Email**
emilton@ataeducon.com

# Study in UK

ATA | ATA Aspirations (Pvt.) Ltd.
Destination of Dreaminess




## Spot Admissions

15, 16, 17th April 2011

**Courses**

- MBA in International Management
- MBA in International Business Law
- MBA in International Healthcare Management
- MA in Marketing
- MSc Business Information Management
- Master Entry Graduate Diploma (Business and Law)
- MBA (International Management) Top Up Programme

# LEADING TO MBA Programme



The Magna Carta College Faculty team of Professors, Lecturers and Tutors are pre-eminent in their academic fields and very experienced in theory, practice and teaching. In addition to core faculty we have a proven ability to identify and engage outstanding professors from some of the UK's leading business schools. We have deliberately gone into a lot of detail on many of our Faculty because this is the College's true strength: spending some time reading below you will see that our faculty really are leaders in their field.

All of us are dedicated to the success of our students; faculty and support staff will work with you to ensure that your programme meets your exact requirements. We put the needs of the student first in a stimulating learning environment. Our success depends on your success.

## MAGNA CARTA COLLEGE

An International business school in Oxford, UK

**Address** : ATA Aspirations (Pvt). Ltd.
No: 33, 1/1, Sri Maha Bhodi Road,
Dehiwala, Sri Lanka.

**Tel** : 011 720 7989

**Mobile**
077 4939756

**Email**
emilton@ataeducon.com

அதே மாணவன் London City க்கு வெளியே கற்க செல்வானாயின் அவன் £ 5400 இற்கு சற்று அதிகமாக வைத்திருத்தல் வேண்டும்.

### 10. Student Visa வில் UK செல்லும் ஒரு மாணவனின் Dependent எவ்வளவு Bank Balance வைத்திருக்க வேண்டும்?

ஒரு Dependent மாதமொன்றிற்கு £ 533 ஆக 9 மாதங்களுக்கு உரிய தொகையை விட சற்று அதிகமாக வைத்திருத்தல் வேண்டும். எனது அறிவுரை அவர்கள் பிரதான மாணவனின் தொகையான £7200 வைத்திருப்பது நல்லது.

### 11. பல முகவர்கள் Visa விற்கு முன்னரும், பின்னரும் பணம் வாங்குகின்றார்களே?

இடை முகவர்களை (Sub Agent) விட UK பல்கலைக்கழகத்துடனோ அல்லது கல்லூரியுடனோ தொடர்பிலுள்ள முகவர்களுக்கு Visa கிடைக்கும் ஒவ்வொரு மாணவனுக்குமான Commission வழங்கப்படும். இன்னிலையில் அவர்கள் மாணவர்களிடம் Charge பண்ணுவது பொருத்தமானதல்ல. கொடுக்கத்தான் வேண்டும் என்று மாணவர்கள் நினைத்தால் அவ்வாறான முகவர்களிடமே செல்லட்டும்.

### 12. மாணவர்களிடம் Charge பண்ணாத முகவர்கள் உள்ளனரா?

ஏன் இல்லை. ATA Aspirations (Pvt.) Ltd. கூட எதுவும் Charge பண்ணுவதில்லையே.

### 13. Student Visa வில் UK செல்லும் மாணவர்கள் தமது கல்வியை முடித்துக்கொண்டபின் நாடு திரும்ப வேண்டுமா?

இந்த நடைமுறை இன்று நேற்றல்ல எப்போதுமே இருந்த இருக்கின்ற legal நடைமுறை ஒன்றுதான். ஆனால் "Student Visitor" ஆக செல்லுதகின்ற மாணவன் தமது Visa ஐ மேலதிக படிப்பிற்காக UK ல் இருந்து கொண்டே renew பண்ண முடியாது. ஆனால் Tier 4(General) Student Visa வில் செல்லும் மாணவன் UK இல் இருந்துகொண்டே தமது Visa ஐ Renew செய்துகொள்ள முடியும்.

### 14. UK Student Visa விற்கு IELTS கட்டாயமானதொன்றா?

இல்லை, பாடநெறிகளை பொறுத்து IELTS இன் தேவை இருக்கிறது. எல்லா மாணவர்களும் IELTS எடுக்க வேண்டும் என்றில்லை. UK இல் கற்பதற்கான ஆங்கில அறிவினை வளர்க்க விரும்பும் மாணவர்கள் IELTS எடுப்பது நல்லதொருவிடயம்.

### 15. ஒரு மாணவனுக்காக இன்னொருவர் Bank Balance காட்ட முடியுமா?




**மேலதிக தகவல்களுக்கு**

ATA Aspirations (Pvt.) Ltd.

Tel: 077 4939 756

Email: emilton@ataeducon.com
ataeducon@gmail.com





முடியும், ஆனால் அவர்கள் மாணவர்களது பெற்றோர் or பாதுகாவலராக இருப்பதுடன் அதற்கான ஆதாரமும்(Eg. Birth Certificate) காட்டப்படவேண்டும்.

### 16. பெற்றோர் or பாதுகாவலரை தவிர 3 ஆம் நபர் ஒருவர் மாணவருவருக்காக Bank Balance கட்ட முடியுமா?

நிச்சயமாக இல்லை

### 17. கடந்த காலங்களில் Visa நிராகரிக்கப்பட்ட மாணவர்கள் மீண்டும் Apply பண்ண முடியுமா?

நிச்சயமாக முடியும் ஆனால் அவர்கள் முன்னர் நிராகரிக்கப்பட்ட எல்லா காரணங்களையும் மறைக்காமல் புதிய Application இல் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

### 18. Visa நிராகரிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு apply பண்ண முடியாத மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

Visa Officer ஆல் தவறாக 10 வருடங்களுக்கு Band பண்ணப்பட்டுள்ளது என்றால் அவர்காளால் 28 நாட்களுக்குள் Administrative Review Request பண்ண முடியும். தவறு மாணவனின் பக்கம் என்றால் கூட UK இல் Appeal செய்வதன் மூலம் இந்த 10 வருட தடையை தளர்த்துவதற்கு சிறிய வாய்ப்புகள் உள்ளன. ATA வின் Splicitors அதற்குத் தயாராக உள்ளனர்.

### 19. Visiting Visa நிராகரிக்கப்பட்ட மாணவர்கள் student Visa விற்கு Apply பண்ண முடியுமா?

நிச்சயமாக முடியும். அவர்களது நிராகரிக்கப்பட்ட காரணங்களில் அது தங்கியுள்ளது.

### 20. குறிப்பிட்ட Bank Balance மாணவரது கணக்கில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும்.

குறைந்தது 28 நாட்களாவது இருக்கவேண்டும்.

### 21. குறித்த Bank Balance இற்கு Bank கொடுக்கின்ற Balance Confirmation Letter எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும்.


எடுக்கப்பட்ட Balance confirmation letter Date இல் இருந்து 28 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதாவது எடுக்கப்பட்ட Bank Balance confirmation letter ஐ 28 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும் அல்லாவிடல் மீண்டும் Bank இலிருந்து புதிய letter எடுத்துக்கொள்ள வேண்டும்.

### 22. UK Student Visa விற்கு வயதெல்லை உண்டா?

இல்லை. இருந்த போதிலும் அவர்கள் கற்க விரும்பும் கற்கை நெறியிலும் அது தங்கியுள்ளது. உதாரணமாக 4 வயது சிறுவன் கூட UK Student Visa விற்கு Child Student ஆக Apply பண்ண முடியும். 60 வயது முதியவர் கூட MBA கற்கைநெறிக்கு Apply பண்ணமுடியும்.

Genuine மாணவர்களை UK எப்போதும் வரவேற்கிறது போலியான முகவர்களையோ போலியான Certificates யோ நாடுவதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை சிதைத்துக்கொள்ளாது நேர்மையான முறையில் முயற்சிசெய்து உங்கள் UK கனவை நனவாக்கிக்கொள்ளுங்கள்


**UK Student Visa - Call**
**077 4939756**



# ஜோதிட ஓசை



## புத்தாண்டுப் பலன்கள்

## மேஷம்

எதிலும் புதுமையைப் புகுத்தும் நீங்கள், பழமையையும் பாராட்டிப் பேசுவீர்கள். ஆறாவது அறிவுக்கு அடிக்கடி வேலை தருவீர்கள். பலரின் அந்தரங்க விஷயங்களை தெரிந்து வைத்திருந்தாலும், யாரையும் காட்டிக்கொடுக்க மாட்டீர்கள். தன்மானம் தவறாதவர்கள். உங்கள் ராசியை சுக்கிரன் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணவரவும் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் கைகூடும். வாகனம் வாங்குவீர்கள்.

வங்கிக்கடன் கிடைக்காமல் பாதியிலேயே வீடு கட்டும் பணி நின்று விட்டதே: இனி லோன் கிடைக்கும், இந்த ஆண்டு முழுக்க பிள்ளைகளுக்கு அருமையான காலகட்டம்.

புதன் 8ல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பிரபலமாவீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். 7.5.2011 வரை குரு 12ம் வீட்டில் இருப்பதால் சின்னச்சின்ன செலவுகள் அதிகமாகிக்கொண்டே போகும். ஆக்கபூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

புண்ணியதலங்கள் சென்று வருவீர்கள். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்லவிதத்தில் முடியும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையும்.

குருபகவான் 8.5.2011 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே அமரப் போகிறார். எனவே உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். கணவன் மனைவிக்குள் வீண் சண்டைகளும், சச்சரவுகளும் வரக்கூடும்.

யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்காதீர்கள்.எதற்கும் கோபப்படுவதெல்லாம் இனி கூடாது. ரத்த அழுத்தம் அதிகரிக்கக் கூடும். உணவில் உப்பு, காரத்தை குறைத்துக் கொள்ளுங்கள். லாகிரி வஸ்துகளை பயன்படுத்துபவர்கள் இனி அவற்றை அறவே தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகளிடம் அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள், உங்கள் கோபத்தை அவர்களிடம் காட்ட வேண்டாம். உணர்ச்சிவசப்படாமல் முடிவெடுப்பது நல்லது, தேனொழுகப் பேசுவார்கள் என்று யாரையும் நம்பி விட வேண்டாம். குடும்பத்தில் சுபச் செலவுகள் இருந்து கொண்டேயிருக்கும். விருந்தினர், உறவினர் வருகை அதிகரிக்கும்.

செரிமானக் கோளாறு, தலைச் சுற்றல் வரக்கூடும், விலை உயர்ந்த ஆபரணங்களை இரவல் தர வேண்டாம், யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும், கர்ப்பிணிப்பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. முக்கிய பாத்திரங்களில் கையெழுத்திடும்போது ஒருமுறைக்கு பலமுறை படித்துப் பார்த்து கையெழுத்திடுங்கள், அண்டை அயலாருடன் அளவாகப் பழகுங்கள், நயமாகப் பேசுபவர்களை நம்பாதீர்கள்.

சனி பகவான் 19.12.2011 வரை உங்கள் ராசிக்கு 6வது வீட்டிலேயே வலுவாக இருப்பதால் எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிக்கக் கூடிய மனோபலம் கிடைக்கும். வி.ஐ.பி களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் ஷேயார் மூலம் பணம் வரும். பழைய கடனில் ஒரு பகுதியைப் கொடுத்து முடிப்பீர்கள். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். வேற்றுமொழிக்காரர்கள் உதவுவார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வழக்குகளில் வெற்றி கிடைக்கும். அந்த வெற்றி மூலம் சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். ஏளனமாகவும், இழிவாகவும் திட்டியவர்களெல்லாம் இனி பாராட்டுவார்கள்.

புதிதாக நிலம், வீடு வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்தை சீரமைப்பீர்கள். தாய்வழியில் இருந்து மனக்கசப்புக்கள் நீங்கும், எதிர்பார்த்து காத்திருந்த அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும்.

ராகு பகவான் 16.5.2011 முதல் உங்கள் 8வது வீட்டில் வந்தமர்கிறார். கேது பகவான் 2வது வீட்டில் வந்தமர்கிறார். தந்தையார் ஸ்தானத்தை விட்டு ராகு விலகுவதால் இதுவரை தந்தைக்கு இருந்த நோய் தீரும். தந்தையாருடன் இருந்த மனக்கசப்புக்கள் விலகும். ஆனால், ராகுவால் சேமிப்புக்கள் கரையும், சிலரால் நீங்கள் ஏமாற்றப்படக் கூடும். எனவே பண விஷயத்தில் கறாராக இருங்கள். சிலருக்கு பால்வின் நோய்கள் வரக்கூடும். கேதுவால் வாக்குவாதங்கள் இருக்கும். யாருக்கும் உறுதிமொழி தர வேண்டாம்.

கூடுதலாக சில மொழிகளை கற்றுக் கொள்வீர்கள். பொது அறிவுத்திறன் வளரும். இனி இளைய சகோதரர் உங்களை மதிப்பார். உங்கள் ராசிநாதனான செவ்வாய் 11.9.2001 முதல் 3.11.2011 வரை பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும், கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது, அரசு விவகாரங்களிலும் அலட்சியப்போக்கு கூடாது.

வியாபாரிகளே! புதிதாக தொழில் தொடங்கும் ஆசையில் மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் எதுவும் செய்ய வேண்டாம். பாக்கிகளை கொஞ்சம் சிரமப்பட்டு வசூலிக்க வேண்டி வரும். வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். ஜனவரி, பிப்பிரவரி, நவம்பர் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் தையெழுத்தாகும். லாபமும் அதிகரிக்கும்.
இந்தப் புத்தாண்டு பிற்பகுதியில் செலவினங்களையும் அலைச்சல்களையும் தந்தாலும் முற்பகுதியில் அதிரடி முன்னேற்றங்களையும் செல்வாக்கையும் தருவதாக அமையும்.

# டி.ஆர். எனக்கு உதவவில்லை

## வானம் பட ஹீரோ சிம்பு



வானம் படத்தில் நடித்துள்ள சிம்பு, பள்ளியில் படிக்கும் போதிலிருந்து சினிமாவில் ஊறி வளர்ந்ததை நினைவு கூர்ந்துள்ளார்.

டீன் ஏஜ் ஹீரோவாக வயதுக்கு மீறிய பக்குவத்தோடு சிம்பு திரையில் தோன்றியதையும் கூறுகிறார்கள். விண்ணைத்தாண்டி வருவாயா படத்துக்குப் பிறகு வேட்டை, கோ, நண்பன் என சிம்புவை நடிக்க அழைத்தார்களாம்.

தற்போது “போடா போடி”, வேட்டை மன்னன்”, “தபங்” ரீமேக் தமிழ் படம் என சிம்பு பிஸியாக இருக்கிறார். தமிழ் சினிமாவில் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு மேல், நான் ஒரு ஹீரோவாக வளர தந்தை டி.ஆர்., உதவவில்லை.


சின்ன வயதிலேயே சினிமாவை ஊட்டி வளர்த்தார். அதற்கு பிறகு நானே கஷ்டப்பட்டு காலூன்றி நின்றேன். ஹீரோ பொசிசனை நிலைநிறுத்திக்கொள்ள கடுமையாக உழைக்கிறேன்

பிலிம் மேக்கிங் மட்டுமின்றி மற்ற தொழில்நுட்பங்களை வழக்கமாக கவனிக்கிறேன். படத்தில் நடிக்கும் போது, என்னோட ஷாட் வரும் வரை கேரவேனில் உட்கார்ந்திருக்கும் ஹீரோ நானில்லை.

செட்டில் டைரக்டரோடுதான் என்னை பெரும்பாலான நேரங்களில் பார்க்க முடியும். அதுமட்டுமின்றி, கம்போசிங்-எடிட்டிங் ஏரியாவிலும் கவனம் செலுத்துவேன். என் சொந்த புராஜக்ட் மாதிரி பார்த்துக்கொள்வேன்.

இதை ஓவராக சிம்பு தலையிடுவதாக கூறுகிறார்கள். அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. எந்த வித ஈகோவும் இல்லாமல் படக்குழுவினருடன் கலந்து பணியாற்றுவது என் ஸ்டைல். யார் நல்லது சொன்னாலும் எடுத்துக்குவேன்.

சில நேரங்களில் நான் சறுக்கியிருக்கலாம். சிக்கல், வலிகளை கடந்து வந்துள்ளேன். குடும்பமும் ரசிகர்களும் எனக்கு மிகப்பெரிய பலம். சிம்பு இயக்கிய மன்மதன் படத்தோடு டைரக்டர் கௌதம் தன் “நடுநிசி நாய்கள்” படத்தை இணைத்து, டிவி ஷோ ஒன்றில் பேசியதால் சிம்பு உற்சாகத்தில் மிதந்தாராம்.



ராசிகளின் சங்கமம்

# Ram Bros

புடைவை களஞ்சியம்

- Qualified Indian Sarees
- Salwar Suits
- Panjabi Suits
- Bridal and Fashionable Saree & Blouses
- Party Sarees & Boluses

No: 140, Main Street, Colombo 11, Sri Lanka.
Tel: 011 232 0127, 011 244 7698
Email: rambros@eureka.lk




Ram Bros
SINCE 1967


தட்ஷா
அழகுக்கலையகமும்
பயிற்சி நிலையமும்
மணப்பெண் அலங்காரம்
மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள்
அனைத்துவகையான முக ஒப்பனைகள்
சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ்
மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts)
பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Straightening)
றீ-பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)
Special Bridal Packages & Wedding packages are Available
இல. 84, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com

# மங்கையர் அழகு மதிப்பிற்குரியது



பெண்கள் எல்லோரும் தங்களது உடலையும் முகத்தையும் அழகாக வைத்துக் கொள்ளத்தான் விரும்புகின்றார்கள். இன்றைய காலத்தில் அழகு சாதனப் பொருட்கள் கடையில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அதிகமானவர்கள் முழுமையான விளக்கத்தைப் பெறாது அவற்றை வாங்கி உடலிலும் முகத்திலும் பூசி அவதிப்படுகிறார்கள். அதற்கு நாம் முதலில் நமது சருமத்தின் தன்மை என்ன என்பதையும் நாம் எப்படிப்பட்ட பொருட்களை வாங்கலாம் என்பதனையும் ஒரு கைதேர்ந்த அழகுக்கலை நிபுணரிடம் கேட்டு அறிந்து கொண்டு பிறகு தமக்குரிய பொருட்களை வாங்கிப் பாவனை செய்யவேண்டும்.

நாம் எமது முகத்தை மாதத்திற்கு ஒரு தடவை ஏனும் Clean Up செய்து வந்தால் முகம் சுருக்கம் ஏற்படாது. பளபளப்பாக இருக்கும். வாரம் ஒரு முறை உடல் முழுவதும் ஸ்கிறப் செய்து மசாஜ் செய்து வருவது நல்லது. வெய்யிலில் செல்லும் போது கண்டிப்பாக எமது சருமத்திற்குப் பொருத்தமான சூரிய கதிரிலிருந்து பாதுகாக்கக் கூடிய கிறீம் போட்டுக் கொள்ள வேண்டும். முகத்திற்கு என்னதான் மேக்கப் போட்டாலும் எமது சருமத்தை சுருக்கமின்றி பளபளப்பாக பேணுதல் வேண்டும்.

### பயிற்சி வகுப்புக்கள்

எமது அக்கடமியில் பேசியல்கள், கெயார் ஸ்ரைல்கள், மணப்பெண் அலங்காரம் கேக் வகைகள், கைவினை பொருட்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடை பெறுகின்றன.



## பெண்களுக்கான GYM வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**விடைகள்** (1.) 21 (2.) 1Kg, 3Kg, 9Kg, 27Kg
(3.) one, two, three,...., Hundred (4.) Zero


## தட்ஷா அழகுக்கலையகமும் பயிற்சி நிலையமும்

## எமது சேவைகள்

- அனைத்து வகையான பேசியல்கள்
- கெயா ஸ்ரையில் & மேகப்
- சிறுவர் பெண்களுக்கான கெயா கட்ஸ்
- வக்சிங் (Waxing)
- கெயார் ஸ்ரெய்ட்னிங் (Straitening)
- கெயார் கலரிங் (Colouring)
- பேமிங் (Perming)
- றீபொன்டிங் (Rebonding)
- Hair & Body Massaging
- பெடிக்கயூர் (Pedicure)
- மெடினிகியூர் (Manicure)
- நெயில் ஆட்ஸ்

நவீன முறையிலான மணப்பெண் அலங்காரங்கள், கெயர் ஸ்டைல்கள், தலை சோடனைகள், பூச் செண்டுகள், பிறந்தநாள், திருமண வைபவங்களுக்கான கேக் வகைகள் றிச்கேக், மணமக்களுக்கான அழகிய பூச் சோடனைகளால் ஆன கதிரைகள் (Settee Back) அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

**உங்களது திருமணத்திற்கு உடனே விரைந்து வாருங்கள் உங்கள் கனவை நாங்கள் நிறைவேற்றுவோம்.**

**Hotline: 077 33 83643**

ஆதியும் அந்தமும் இல்லாக் கால வெள்ளத்தில் கற்பனை ஓட்டத்தி ஏறி எம்முடன் சற்றுநேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை கேட்டுக்கொள்கிறோம். வினாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இன்றைக்கு தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு (1950இல் எழுதியது) ஆண்டுக்கு முந்திய காலத்துக்கு செல்வோமாக.

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டின் தென்பகுதியில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டுகாத தூரத்தில், அலை கடல் போன்ற ஓர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீரநாரயண ஏரி என்று பெயர். அது தெற்கு வடக்கில் ஒன்றரை காத நீளமும் கிழக்கு மேற்கில் அரைக் காத அகல்மும் உள்ளது. காலப்போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் "வீராணத்து ஏரி" என்ற பெயரால் வழங்கி வருகிறது. புது வெள்ளம் வந்து பாய்ந்து ஏரியில் நீர் நிரம்பித் ததும்பி நிற்கும் ஆடி ஆவணி மாதங்களில் வீரநாராயண ஏரியைப் பார்ப்பவர் எவரும் நம்முடைய பழந்தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்தில் சாதித்த அரும்பெரும் காரியங்களைக் குறித்துப் பெருமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும் உரிய காரியங்களை மட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப்போகும் ஆயிரங்கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றி விட்டுப் போனார்கள் அல்லவா?

ஆடித்திங்கள் பதினெட்டாம் நாள் முன் நேரத்தில் அலை கடல் விரிந்து பரந்திருந்த வீர நாராயண ஏரிக்கரை மீது ஒரு வாலிப வீரன் குதிரை ஏறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் தமிழகத்து வீர சரித்திரத்தில் புகழ்பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவரையன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர். நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்துக்களைத்திருந்த அவனுடைய குதிரை மெள்ள மெள்ள நடந்து சென்று கொண்டிருந்தது. அதைப் பற்றி அந்த இளம் வீரன் கவலைப்படவில்லை. அகண்டமான அவன் வீர நாராயண ஏரியின் தோற்றம் அவன் உள்ளத்தை அவ்வளவாக வசீகரித்திருந்தது.

ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இருகரையும்தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக் கொண்டு அலைமோதிக் கொண்டிருப்பது வழக்கம். வட காவேரி

## பகுதி 1





Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Etext preparation: Mr. Bhaskaran Sankaran and colleagues of Anna University - KBC Research Center, MIT - Chrompet Campus, Chennai, India.
Proof-reading: Mr. S. Anbumani, Mr. N.D. Logasundaram, Mr. Narayanan Govindarajan, Ms. Pavithra Srinivasan, Mr. Ramachandran Mahadevan, Ms. Sathya, Mr. Sreeram Krishnamoorthy, Dr. Sridhar Rathinam, Mrs. Srilatha Rajagopal, Mr. Vinoth Jagannathan
Etext prep. in html/web version: Mr. S. Anbumani, Blacksburg, Virginia, USA
Etext prep in pdf format: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland

This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.

© Project Madurai 2003

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.



என்று பக்கதர்களாலும் கொள்ளிடம் என்று பொது மக்களாலும் வழங்கப்பட்ட நதியிலிருந்து வடவாற்றின் வழியாகத் தண்ணீர் வந்து வீர நாராயண ஏரியில் பாய்ந்து அதை ஒரு பொங்கும் கடலாக ஆக்கியிருந்தது. அந்த ஏரியின் எழுபத்து நான்கு கணவாய்களின் வழியாகவும் தண்ணீர் குமுகுமுவென்று பாய்ந்து சுற்றுப் பக்கத்தில் நெடுந்தூரத்துக்கு நீர் வளத்தை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஏரித் தண்ணீரைக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் கழனிகளில் உழவும் விரை தெளியும் நடவும் நடந்து கொண்டிருந்தன. உழுது கொண்டிருந்த குடியானவர்களும் நடவு நட்டுக் கொண்டிருந்த குடியானப் பெண்களும் இனிய இசைகளில் குதூகலமாக அங்கங்கே பாடிக் கொண்டிருந்தார்கள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்தியத்தேவன் களைத்திருந்த குதிரையை விரட்டாமல் மெதுவாகவே போய் கொண்டிருந்தான். ஏரிக்கரை மீது ஏறியதிலிருந்து அந்த ஏரிக்கு எழுபத்துநாலு கணவாய்கள் உண்டு என்று சொல்லப்படுவது உண்மைதானா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவன் கணவாய்களை எண்ணிக் கொண்டே வந்தான். ஏறக்குறைய ஒன்றரைக் காத தூரம் அவன் அந்த மாபெரும் எரிக்கரையோடு வந்த பிறகு எழுபது கணவாய்களை எண்ணியிருந்தான்.

ஆகா! இது எவ்வளவு பிரம்மாண்ணமான ஏரி? எத்தனை நீளம்? எத்தனை அகலம்? தொண்டை நாட்டில் பல்லவப் பேரரசர்களின் காலத்தில் அமைத்த ஏரிகளையெல்லாம் இந்த ஏரிக்கு முன்னால் சிறிய குளங்குட்டைகள் என்றே சொல்லத் தோன்றும் அல்லவா? வட கவேரியில் வீணாகச் சென்று கடலில் விழும் தண்ணீரைப் பயன்படுத்துவகற்காக மதுரை கொண்ட பராந்தகரின் புதல்வர் இளவரசர் இராஜாதித்தர் இந்தக் கடல் போன்ற ஏரியை அமைக்க வேண்டுமென்று எண்ணினாரே? எண்ணி அதைச் செயலிலும் நிறைவேற்றினாரே? அவர் இணை வேறு யார்? தக்கோலத்தில் நடந்த போரில் தாமே முன்னணியில் யானை மீது ஏறிச் சென்று போராடினார் அல்லவா? போராடிப் பகைவர்களின் வேலை மார்பில் தாங்கிக் கொண்டு உயிர்நீத்தார் அல்லவா? அதனால் “யானை மேல் துஞ்சிய தேவர்” எனப் பெயர்பெற்று வீர சொர்க்கம் அடைந்தார் அல்லவா?

இந்தச் சோழ குலத்து மன்னர்களே அதிசயமானவர்கள்தான்! அவர்கள் வீரத்தில் எப்படியோ, அப்படியே அறத்திலும் மிக்கவர்கள். அறத்தில் எப்படியோ அப்படியே தெய்வபக்தியில் சிறந்தவர்கள். அத்தகைய சோழ குல மன்னர்களுடன் நட்புரிமை கொள்ளும் பேறு தனக்கு கிடைத்திருப்பது பற்றி நினைக்க நினைக்க வந்தியத்தேவனுடைய தோள்கள் பூரித்தன. மேற்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்த காற்றினால் வீர நாராயண ஏரித் தண்ணீர் அலைமோதிக் கொண்டு கரையைத் தாக்கியதுபோல் அவனுடைய உள்ளமும் பெருமிதத்தினால் பொங்கித் ததும்பிற்று.

**தொடரும்..**

## அறுவை ஜோக்

**தீபாவளி அன்னிக்கு**
**பொங்கல் சாப்பிடலாம், ஆனால்**
**பொங்கல் அன்னிக்கு**
**தீபாவளிய சாப்பிட முடியுமோ...?**

*******

**குத்தினா ஏன் இரத்தம் வருகிறது?**
**யாரு குத்தினது என்னு பாக்கத்தான்.**


*******

**தலையில இருந்து அடிக்கடி முடி**
**கொட்டுன்றதுக்கு முக்கியகாரணம்**
**என்ன தெரியுமா?**

**தெரியல்லயே .. என்னது?**

**தலையில முடி இருக்கிறதுதான்..!**






Study in UK

OUR SERVICE ABSOLUTELY FREE

ATA Aspirations (Pvt). Ltd.

No: 33, 1/1, Sri Maha Bhodi Road,
Dehiwala, Sri Lanka.

Tel: 011 720 7989 Mobile: 077 4939756
Email: emilton@ataeducon.com

www.ataeducon.com


# சிந்தியுங்கள்

## கணிதப்புதிர்

### 1

கள்வன் ஒருவன் மாந்தோப்பு ஒன்றினுள் மாங்காய்கள் களவாடுவதற்காக நுழைந்தான். துரதிஷ்டவசமாக தோப்பினுள் காவலாளியிடம் அகப்பட்டு விட்டான். காவலாளி அவனை வித்தியாசமான முறையில் தண்டிக்க விரும்பினான்.

அவனிடம் சில மாங்காய்களைக் கொடுத்து அடுத்துவரும் 3 மாந்தோப்புகள் ஒவ்வொன்றிலும் வாயிலில் 8 மாங்காய்களை கொடுத்து மிகுதியாக அவனிடம் எவ்வளவு மாங்காய்கள் உள்ளனவோ அதேயளவு மாங்காய்களை உள்ளே பிடுங்கி வெளியில் வரும் போதும் காவலாளியிடம் 8 மாங்காய்களை கொடுத்து வர வேண்டும் (உதாரணமாக வாயிலில் 8 மாங்காய்கள் கொடுத்தபின் மிகுதியாக 10 மாங்காய்கள் இருப்பின் மேலும் 10 மாங்காய்களையே அவன் பறிக்கவேண்டும்). என்று பணித்தான், கள்வனும் அவ்வாறே 3 தோப்புக்களிலும் செய்தான் ஆனால் இறுதியில் அவன் கையில் எந்த மாங்காய்களும் இல்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பினான். **ஆரம்பத்தில் அவனது கையில் காவலாளி கொடுத்த மாங்காய்கள் எத்தனை?**

### 2.


40kg தராசுப்படி ஒன்று 4 துண்டுகளாக உடைந்தது. ஆனால் அவற்றை உபயோகித்து 1 Kg முதல் 40 Kg வரை அளக்க முடிந்தது அந்த 4 தராசுப்படி துண்டுகளின் பெறுமதிகளை கூறமுடியுமா உங்கள் கணித அறிவை பரிசோதிக்க ஒரு வினா?

### 3. 'A' யில்லாத 100 சொற்கள்

'A' என்ற ஆங்கில எழுத்து இல்லாத 100 சொற்களை மடமட வென உங்களால் கூற முடியுமா?, முயன்று பாருங்கள்.

### 4. உங்களால் முடியுமா? முயன்றுபாருங்கள்?

(a-x) (b-x) (c-x) ...... (z-x)
மேற்குறித்த கோவைக்கான பெறுமதியினை அதிகநேரம் எடுக்காது உங்களால் கூறமுடியுமா?



விடைகளுக்கு 19ம் பக்கம் பார்க்கவும்

## இமேஜ்களை .pdf file ஆக மாற்றம் செய்ய....

இமேஜ் பைல்களான BMP, JPEG, TIFF, PNG file போமெட்டுக்களை நாம் ஏதாவது ஒரு இமேஜ் எடிட்டரை கொண்டு மட்டுமே காண முடியும். இந்த இமேஜ் எடிட்டர் சாதாரணமான பெயின்ட்டாக கூடஇருக்கலாம். நாம் இந்த இமேஜ்களை வேண்டுமெனில் .pdf file ஆக கூட மாற்றிக்கொள்ள முடியும்.

நம்முடைய சான்றிதழ்களை ஸ்கான் செய்து நம்முடைய் ஈமெயில் முகவரியிலேயோ அல்லது ஒன்லைன் கோப்பு சேமிப்பு இடத்திலேயோ பாதுகாப்பாக வைத்திருப்போம். ஆனால் பல சான்றிதழ்கள் இருப்பதால் அதனை நாம் தனித்தனியே மட்டுமே பார்க்கமுடியும். அவ்வாறு இல்லாமல் .pdf file ஆக மாற்றி இருப்பின் நாம் அந்த இமேஜ்களை ஒரே file ஆக மாற்றி வைத்துக்கொள்ள முடியும்.

இந்த மென்பொருளின் மூலம் இமேஜ்களை .pdf file ஆக மாற்றிக்கொள்ள முடியும். மேலும் இந்த மென்பொருளில் இமேஜ் file ஐ பதிவேற்றம் செய்து எடிட்டிங்கும் செய்து கொள்ள முடியும்.

இந்த மென்பொருளானது விண்டோஸ் 7 ஒப்ரேட்டிங் சிஸ்டங்களில் வேலைசெய்யக் கூடியது ஆகும்.

இதனை ஒரு வகையில் .pdf ஆக பிரசன்டேன் என்றும் கூறலாம். இந்த மென்பொருளானது பவர்பாயின்ட் பிரசன்டேசனை போன்றது.

இம் மென் பொருளை தரவிறக்கம் செய்ய


http://www.rttsoftware.com/downloads.html#DownloadPDFrizator

## கலக்கல் கலவை இசையை உருவாக்கும் மென்பொருள்

வீடியோக்கள் மற்றும் ஆடியோக்களின் இசையை இணைத்து கலக்கல் கலவையாக மாற்றும் புத்தம் புதிய இசையை உருவாக்கும் டிஸ்க் ஜாக்கிகளுக்கான (Disk Jockey) இலவச மென்பொருள் இது. ஆப்பிள் மேக் மற்றும் விண்டோஸ் கணனிகளில் இயங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது,

இந்த மென்பொருளை பயன்படுத்தி நாம் புதிய இசையை உருவாக்கலாம். இது டிஸ்க் ஜாக்கிகளுக்கு மட்டுமில்லாமல் அனைவருக்கும் பொழுதுபோக்கு சாதனமாக பயன்படுகிறது.

இந்த வணீகரீதியில்லாமல் வீட்டுப் பயன்பாடானது(Home Edition). இது முற்றிலும் இலவசமானது. தரவிறக்கிப் பயன்படுத்தலாம்.



"ஹெலிகாப்டர் எப்படி ஆக்ஸிடென்ட் ஆச்சு....?

"நுவரஎலியா பக்கமா பறந்தப்போ ஜில்லுன்னு குளிரா இருந்ததால ஹெலிகாப்டர் ஃபானை ஆப் பண்ணிட்டாங்களாம்..."

கணினியின் விசைப்பலகை மற்றும் மவுஸ் கொண்டு இதை இயக்கலாம். யு எஸ் பி (Universal Seial Bus) கருவிகளுடன் ஒத்திசைவு கொண்டதால் இதை எங்கு வேண்டுமானாலும் உடனடியாக பயன்படுத்த முடியும்.

பல்வேறு நவீன கோப்புவடிவங்களுடன் இதை பயன்படுத்தும் வண்ணம் எளிமையாக்கப்பட்டுள்ளது.

தரவிறக்கம் செய்ய
http://www.virtualdj.com/





# மழலைகளின் ஓசை

**நீங்கள் 12 வயதிற்கு உட்பட்டவரா?**

கீழுள்ள வரைபடத்திற்கு குறிப்பிட்ட இலக்கம் உள்ள பகுதிக்கு வரைபடத்தின் கீழ் குறிப்பிட்ட இலக்கங்களுக்குரிய நிறங்களை தீட்டுக. கிடைக்கும் உருவத்தின் பெயருடன் நீங்கள் நிறம் தீட்டிய உருவத்தை வெட்டி கீழ்காணும் படிவத்தை நிரப்பி அதனுடன் எமது முகவரிக்கு(அடுத்த பக்கம்) அனுப்பிவைக்கவும். தேர்ந்தெடுக்கப்படும் அதிஷ்டசாலி குழந்தைகளின் பெயரும் விபரமும், அடுத்து வரும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

பெயர் : ..............................................................

வயது : ..............................................................


முகவரி : ..............................................................

..............................................................


தொலைபேசி இல. : ..............................................................

பாடசாலை : ..............................................................

உருவத்தின் பெயர் : ..............................................................




13 Orange | 14 White | 15 Black | 16 Red



# மழலைகளின் ஆக்கம் 01

## அபி, வயது 4 தெஹிவளையில் இருந்து





நாளைய உலகின் நாயகர்களான இன்றைய மழலை மொட்டுக்களுக்கான ஒரு பகுதியை ஒதுக்கி அவர்களின் ஆக்கங்களுக்கும், திறமைகளுக்கும் வழியமைக்கும் ஒரு ஊடகமாக அலை ஓசை வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பெற்றோர்களே உங்கள் செல்வங்களை 'மழலைகளின் ஓசையில்' அங்கத்துவர்களாக இணைத்து அவர்களின் பக்கத்தை அவர்களின் ஆக்கங்களால் அலங்கரிக்க உங்களை அழைக்கிறோம். கீழுள்ள பகுதியை நிரப்பி புகைப்படத்துடன் எமக்கு அனுப்பி உங்கள் செல்வங்களை இலவசமாக அங்கத்துவர்கள் ஆக்குங்கள்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ATA Aspirations (Pvt.) Ltd.**
No: 33, 1/1, Srimaha Bodhi Road, Dehiwala, Colombo.

Call Monday - Friday from 10.00 am - 5.00 pm.
011 720 7989

பெயர் : ..............................
வயது : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல. : ..............................
பாடசாலை : ..............................

# "மகிழ்ச்சியாக இருக்கலாம் வாங்க..."



நான் என்னைச் சுற்றிலும் துதிபாடுகின்ற கூட்டத்தைத்தான் உண்டாக்கினேன். நண்பர்களை உருவாக்கிக் கொள்ள நான் முயற்சிக்கவேயில்லை என்றான் நெப்போலியன். அவன் தன்னுடைய வாழ்க்கையின் கடைசிக்காலத்தைத் தனிமையில்தான் கழித்தான்.

ஜனாதிபதி தேர்தலுக்கு ஆபிரகாம் லிங்கன் வேட்பாளராக நின்றபோது, ஒருவர் சொன்னார்: "லிங்கனுக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கிறார்கள். அவரிடம் வேறு எதுவும் இருக்கவில்லை."

தன்னுடைய மாநிலச் சட்ட சபைக்கு லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சூட் தைப்பதற்குப் பணம் கடன் வாங்கினார். அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தன்னுடைய குடும்பத்தை வாஷிங்டனுக்கு அழைத்துச் செல்லப் பணம் கடன் வாங்கினார்.

ஆனால், நட்பு விஷயத்தில் அவர் மிகப்பெரிய செல்வந்தராக விளங்கினார்.

"நண்பர்கள் இருக்கின்ற வரையில் எவரும் பயனில்லாதவர் ஆகிவிடுவதில்லை!" என்கிறார் ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்.

நட்பின் அழகினை எஸ்.பி.கூப்பர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"வாழ்க்கை வளமுடன் விளங்க நட்பைப் பலப்படுத்திக்கொள்வது அவசியமாகிறது. வாழ்க்கை நலியாமல் நட்பு காப்பாற்றுகின்றது. மலர்ந்து பழங்கள் உருவாகச் சூரிய வெளிச்சம் போல் காப்பாற்றுகிறது. வாழ்க்கையை மணம் மிகுந்ததாக ஆக்குகிறது.

**"வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய சுகங்களிலேயே உறுதியான, மென்மையான நட்பைப் போல் சிறந்தது எதுவுமில்லை."**

சங்கீத அலையாக ஆன்மாவில் பாய்கிறது. நாணயம், நம்பிக்கை இழக்கின்றபோது கை கொடுத்து உதவுகிறது. எல்லாம் வறண்டு போகும்போது வானத்திலிருந்து மழையாகப் பொழிகின்றது. சவம் ஆகின்ற நிலையிலும் மனிதர்களிடம் ஜீவனைத் தோற்றுவிக்கின்றது.

"உயர்ந்த நட்பில் வர்த்தக அம்சம் இருப்பதில்லை. தியாகத்தின் மீதும், சுயநலமில்லாத தன்மையிலும் அது உருவாகிறது. நல்ல நட்பு எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்ப்பதில்லை. அலை வீசுகின்றபோது நங்கூரமாக இருந்து நிலைகொள்ள உதவுகின்றது."

நட்பை அதற்காக மட்டுமே மதிக்க வேண்டும். அதிலிருந்து என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஒருவர் இன்னொருவருடன் இருப்பது சௌகரியம் என்ற நிலையில் உருவாகின்ற உறவு நட்பாக இருக்க முடியாது. வர்த்தக நோக்கத்துடன் ஏற்படுகின்ற அறிமுகமாக மட்டும்தான் அது இருக்க முடியும்.

பயன் கருதி நட்பைத் தேடுவது வானவீதியில் இருந்து தங்கத்தைப்பெறச் செய்கின்ற முயற்சி போன்றது.

நல்ல நட்பு ஒரு வழிப் பாதை அல்ல. பரஸ்பர உறவில் அது உருவாகிறது. பெறுவதை விடக் கொடுப்பதே அதன் நோக்கமாக இருக்கிறது. தாராளத்தில் மட்டும்தான் அதில் போட்டி ஏற்பட முடியும்.

ஒரு பள்ளிக்கூடத்துக்கு நான் விஜயம் செய்தபோது, அங்குள்ள மாணவர்கள் சைகையால் பேசிக் கொள்வதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை.

"இந்தப்பள்ளிக்கூடத்தில் செவிட்டு ஊமைகள் படிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாதே!" என்று முதல்வரிடம் சொன்னேன்.

"ஒரே ஒரு செவிட்டு ஊமைதான் படிக்கிறான். அவன் தனிமைப்பட்டு விடக்கூடாது என்பதற்காக வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் சைகை பாஷையைச் சொல்லித் தருவதற்கு ஒரு ஆசிரியை நியமித்திருக்கிறோம்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் முதல்வர்.

வீட்டிலும் வேலை செய்யும் இடத்திலும் மற்றவர்களைச் சார்ந்துதான் நாம் இருக்க வேண்டியுள்ளது. நாம் நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்துத்தான் நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

தாராள மனப்பான்மை கொண்ட நண்பர் ஒருவரை நீங்கள் கண்டு பிடிக்கலாம். கஷ்டத்தின் போது அவர் உங்களுக்குத் துணையிருக்கலாம். உங்களுடைய குறைபாடுகள் வெளியே தெரியாமல் பாதுகாககின்றவராகவும் இருக்கலாம்.

மற்றொரு நண்பர் எப்போதும் குஷியாக இருக்கின்றவராக இருக்கலாம். உங்களுக்கு உற்சாகம் குறைகின்றபோது நீங்கள் அவரை நாடிச் செல்லலாம்.

இன்னொருவர் நகைச்சுவையுடன் சுவாரசியமாகப் பேசுகிறவராக இருக்கலாம். நீங்கள் அவரை நாடிச் சென்றால் உங்கள் கஷ்டங்களை அவர் மறக்கச் செய்துவிடுவார்.

பழம்பெரும் தத்துவ ஞானி செனக்கா சொன்னார்: "வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய சுகங்களிலேயே உறுதியான, மென்மையான நட்பைப் போல் சிறந்தது எதுவுமில்லை. நம்முடைய கவலைகளை இனிமையாக்கி விடுகிறது. துயரங்களைப் போக்கிவிடுகிறது. எல்லா நிலைகளிலும் ஆலோசனைகள் சொல்லி ஆறுதல் வழங்குகிறது. ஒரு நல்ல குணத்துடன் நண்பன் இருந்தால் போதும், அந்த நண்பன் எப்போதும் உடனிருப்பது மிகப் பெரிய பலமாகும். நல்ல நட்பு மரணத்தைக் கண்டு அச்சப்படாத மன நிலையினைத் தோற்றுவித்துவிடுகிறது.

நண்பர்கள் வாழ்க்கையின் மௌன பங்குதாரர்கள். நம்முடைய ஆர்வத்தில் ஆர்வம் காட்டுகின்றவர்கள். ஒரு நண்பன், இன்னொரு நண்பன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உதவுகிறான்.

நட்புடன் இருப்பவனைப் போன்ற நல்ல வேலையாள் எவரும் கிடையாது. நல்ல நட்புடன் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள், நண்பர்களைப் பெற முயற்சி செய்யுங்கள்.



# சமூகவிரோத ஆளுமை (Antisocial Personality/ Psychopathy or Sociapathy)

## வரைவிலக்கணம்

ஒரு நபரில் காணப்படும் ஆளுமையானது அவர்வாழும் சமூகத்திற்கும் அவருக்கும் ஊறுவிளைவிப்பதாகவும், அவர் வாழ்கின்ற சமூக, ஒழுக்க நியமங்களை மீறுவதாகவும் (கீழ்ப்படியாமை, பொய் பேசுதல், களவு, ஊர்சுற்றுதல், அழிவு மனப்பான்மை), ஏற்றுக்கொள்ளப்படாததாகவும் காணப்படுமாயின் அத்தகைய நலமின்மை சமூகவிரோத ஆளுமை எனப்படும்.

இந்நமின்மையை Diagnostic Statistical Mannual, Cluster B எனும் பிரிவினுள் அடங்குகின்றது. (நாடகப்பாங்கான, மனவெழுச்சிவயப்பட்ட, ஒழுங்கற்ற பண்புகள் காணப்படும்.)


ஆக்கம்



**கு. கௌதமன்**

உதவி விரிவுரையாளர் (உளவியல்)
மெய்யியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.


## தன்மைகள்

கடுமையான ஆளுமை நலமின்மைகள் என்ற வகைக்குள்ளேயே இது அடங்குகின்றது. இந்நலமின்மை உடையவர்களில் 2 தன்மைகள் காணப்படும்.

1. தொடர்ச்சியான அக்கறையின்மை
2. ஏனைய மனிதர்களின் உரிமையை மீறுதல்

## இயல்புகள்

இவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவார்கள். ஆனால் குற்றச்செயல்களை முன்கூட்டியே திட்டமிட்டுச்செய்யும் திறன் கிடையாது.

1. குற்றவாளிகளோ, இனிமையாகக் கதைக்கும் ஆற்றல்
2. தன்சார்பாக பிறரின் பரிதாபத்தை ஈர்த்தல்





No. 403 1/2, Galle Road, Wellawatte, Colombo 06. Sri Lanka. Tel: 011 2362766, 011 2361937, 011 2361672 Fax: 011 2361888

BRANCHES

No: 233-D, Lower Street, Badulla.
Tel: 055 5638777, 055 4917677 Fax: 2553800


No. 345, Galle Road. Colombo 04.
Tel: 2553440, 2553441, 2553769 Fax: 2553800

E-mail: meetro@sltnet.lk Web: www.metrotravels.lk

3. தம்தேவைகளை நிறைவேற்ற பிறரைத் தந்திரமாகப் பாவித்தல் போன்றவற்றில் திறமைகொண்டு காணப்படுவர்.
4. பிறரின் பரிதாபத்தைத் தூண்டி தம் காரியத்தை நிறைவேற்றுவர்
5. பிறர் தம்மைத் துன்புறுத்துவதாகக் கூறி பிறரின் பரிதாபத்தைப் பெற முயல்வர்

**Diagnostic Statistical Mannual-DSM-4**
**இக்குறைபாடுடையோர் பற்றி பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடுகின்றது.**

15 வயதிற்கு முன்பிருந்து வளர்ந்தோர் பருவம் வரை சட்டரீதியாக சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத செயல்களில் ஈடுபட்டதான வரவாறு கொண்டிருப்பர்.



பெண்கள் பூப்பெய்தும் பருவத்தை ஒட்டியும் ஆண்கள் இதற்கு முன்னதாவும் இத்தகைய நடத்தையில் ஈடுபட ஆரம்பிப்பர்.

1. பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாமை
2. பாடசாலை நடத்தை ஒழுங்கீனம்
3. வீட்டை விட்டு ஓடுதல்
4. குற்றச் செயல்கள்
5. களவு, பொதுச்சொத்து அழிப்பு
6. போதைப்பொருள் பாவனை தவறான பாலியல் நடத்தை போன்ற செயல்களில் ஈடுபடுவர். இத்தகைய கட்டிளம்பருவ பெண்கள் வளந்தோர் பருவத்தில் விபச்சாரிகளாக மாறுவர். தொழில், பாலியல் உறவு, பிள்ளைகளைப் பொறுப்புடன் பராமரித்தல், பொருளாதார ரீதியிலான கட்டுப்பாடு என்பவற்றில் பொறுப்புணர்ச்சி, தொடர்ச்சி என்பன காணப்படுவதில்லை.
9. கடமைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும் பண்பு இவர்களிடம் காணப்படுவதில்லை
10. வேலை, திருமண உறவு, பிள்ளைகளுடனான உறவு, கடன்கொடுத்தோருடனான உறவு என்பவற்றைக் கைவிட்டு இலகுவில் விலகும் சுபாவம் கொண்டிருப்பர்.
11. எளிதில் எரிச்சலடைதல், வன்போக்கு போன்ற நடத்தைகளைக் கொண்டிருப்பர். வீதிச்சண்டை மட்டுமன்றி தன் துணையாள், பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்வர்.
12. பயமற்ற நடத்தை, கட்டுக்கடங்கா நடத்தை என்பன இவர்களிடம் காணப்படும். தாம் பரபரப்படைய வேண்டும் என்பதற்காக ஆபத்தான நடத்தைகளில் ஈடுபடுவர். உதாரணம்: வேகமாக வாகனம் ஓட்டுதல்
13. கணப்பொழுதில் பொருந்தும் மன உந்தல் எதுவோ அதன்வழியே செயற்பட்டு தம் இன்பங்கள், தேவைகளைப் பூர்த்தி செய்யமுனைவர். திட்டங்கள் ஏதுமின்றி செயற்படுவர்.
14. நோக்கம் ஏதுமின்றி பல்வேறு இடங்களுக்குச் செல்வர்.
15. ஒழுக்கக் கட்டுப்பாடு ஏதுமின்றி கிடைக்கும் எவருடனும் பாலியல் நடத்தையில் ஈடுவடுவர்
16. சிறுபொருளோ பெரும் பொருளோ எதையும் களவெடுத்து தம் தேவையைப் பூர்த்தி செய்வர்
17. உண்மையை மதியாமை
18. இவர்கள் அடிக்கடி பொய் சொல்வர். அதையும் இலகுவாகச் சொல்வர். உண்மையை இவர்கள் கருத்தில் எடுப்பதில்லை.

## Fact: 1

மேற்கூறப்படும் அறிகுறிகளனைத்தும் ஒருவரிடம் தொடர்ச்சியாக காணப்பட்டாலே அது சமூகவிரோத ஆளுமை எனக் கருதமுடியும்.

15 வயதிற்குள் மட்டும் காணப்படும் அறிகுறிகளைக் கொண்டு சமூகவிரோத ஆளுமையாளர் என்ற முடிவிற்கு வரமுடியாது. வளர்ந்தோர் பருவத்திலும் அவ் அறிகுறிகள் காணப்பட்டாலே இவ்வாறு கருதலாம்.

## சமூகவிரோத ஆளுமை உருவாகக் காரணிகள்

இதற்கான காரணங்கள் எவை என்பதுபற்றி உளவியலாளர்களிடையே இன்னும் தீர்க்கமான முடிவுகள் பெறப்படவில்லை. எனினும் பின்வரும் காரணிகள் பங்களிப்புச்செய்கின்றன.



### 1. உடலியற் காரணங்கள் (Biological/ Physical Facts)



i. இவர்களில் ஆண்கள் பாலியல் ஓமோனான (Hormone) தெஸ்தெஸ்தரோன் (Testestorone) அதிகளவாகக் காணப்படுகின்றது. இதுவே இத்தகைய ஆளுமையை உருவாக்குகின்றது என்ற கருத்துக் காணப்படுகின்றது. ஆனால் தெஸ்தெஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இவ் ஆளுமை உருவாகின்றதா? இவ் ஆளுமையின் காரணமாக தெஸ்தெஸ்தரோன் அதிகமாகச் சுரக்கப்படுகின்றதா? என்று திட்டவட்டமாக கூறமுடியாது.

ii. இவ் ஆளுமை உடையவர்கள் நுதற்சோணை (Frontal Lobe) முன் மூளைப்பகுதி விருத்தியடையாமல் இருக்கிறது. இப்பகுதி

- திட்டமிடல்
- விளைவுகளைப்பற்றி மதிப்பிடும் ஆற்றல் போன்ற விடயங்களுக்குப் பொறுப்பானது.

இதனால் ஒழுக்க மதிப்பீடுகள், தமது செயல்களின் விளைவுகள் பற்றி அறியும் ஆற்றல் இவர்களில் காணப்படுவதில்லை. இதனால் திட்டமிட்டு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது.

iii. நடுமூளையின் உட்பகுதியில் காணப்படும் Amagdala பகுதியில் ஏற்படும் பாதிப்பே இவ்வகை நலமின்மைக்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

iv. நரம்புத்தளர்ச்சி (Nervous weak) காரணமாகவும் இவ் ஆளுமை ஏற்படலாம்.


v. நரம்புத் தொகுதியின் விருத்தியின்மை காரணமாக கற்றல், கவனம் செலுத்துதல் என்பவற்றில் குறைபாடு ஏற்படலும் இந்நலமின்மைக்குக் காரணம்.

இதன்காரணமாக குற்றச் செயலைச் செய்யும்போது எந்தவித பதட்டமும் இன்றிக் காணப்படுவது மட்டுமின்றி உணர்ச்சிகளைக் கொண்டிருக்காமையும் காரணமாகும்.

இவர்கள் சிறைக்குச் செல்வதுபற்றி அச்சமின்றி இருப்பதற்கும். இலகுவாகப் பொய் சொல்வதற்கும் காரணமாகின்றது.

## 2. உளவியற்காரணங்கள்

மனச்சோர்வு பதட்டக்குறைபாடு என்பன கொண்டோர் சமூகவிரோத ஆளுமையுடையவராய்க் காணப்படுகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



## 3. குடும்பக்காரணங்கள்

i. ஒத்த இரட்டையர் மீது மேற்கொண்ட ஆய்வில் சமூகவிரோத ஆளுமைகொண்டோரில் முன்சந்ததிகளில் இத்தகைய போக்கு இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே குடும்பத்தவரின் மரபணுக்கள் வழியாக இந்நலமின்மை பிள்ளைகளுக்கு கடத்தப்படுவதனால் இது உருவாகின்றது.

ii. சமூகவிரோத ஆளுமையாளர்களின் குடும்பத்தவரிடையே இத்தகைய போக்கு காணப்பட்டது. இத்தகையவரின் தந்தையரும் இந்நலமின்மை கொண்டு காணப்பட்டனர். அதாவது இது ஒரு கற்றுகக்கொள்ளப்பட்ட நடத்தையாகும். குடும்பத்தில் இத்தகைய நடத்தைகளைப் பிள்ளைகளும் உள்வாங்கிக் கொள்வர்.

iii. பெற்றோர் வாக்குவாதத்தில் ஈடுபடும் குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகளும் சமூகவிரோத ஆளுமையாளர்களாக உருவாவது ஆய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

iv. தண்டனை

அ. பெற்றோரால் கடுமையாகத் தண்டிக்கப்படும் பிள்ளைகள் சமூகவிரோத ஆளுமை கொண்டு உருவாகின்றனர்.

ஆ. சீரான ஒழுக்கவிழுமியங்களை நடைமுறைப்படுத்தாது பிள்ளை தவறுவிடும் போது ஒருதடவை கடுமையாகத் தண்டிப்பதும் இன்னொரு தடவை அதே பிழையை தண்டிக்காமல் கவனத்திற்கொள்ளாது விடுவதுமான வளர்ப்புமுறைகொண்ட பெற்றோரிபிள்ளைகளும் சமூகவிரோத ஆளுமை கொண்டவர்களாக உருவாகின்றனர்.

இ. அன்பு கிடைக்காமை, சீரற்ற பிள்ளைவளர்ப்புமுறை, குழந்தைப்பருவத்தில் இருக்கும் போது தாய் பிள்ளைக்குத் தேவையான அன்பு, அக்கறை, தொடுகை, பாலூட்டல், பராமரிப்பு என்பன வழங்காது வளர்க்கப்பட்ட பிள்ளைகள் இத்தகைய நலமின்மையை கொண்டு உருவாகின்றன. அதாவது பிள்ளை வளர்ப்பு முறை சீரற்றதாக இருப்பின் இத்தகைய ஆளுமை ஊருவாகும்.

## 4. சமூகக் காரணங்கள்

i. சமூகம்/குழு

ஒரு சமூகம் அல்லது குழு சமூகவிரோத ஆளுமை கொண்டு காணப்படும் போது அதிலுள்ள அங்கத்துவங்களில் இத்தகைய ஆளுமை உருவாகின்றது. சமூகத்தில் அநீதிகள் மேலோங்கி நிற்கும் போது அவை இத்தகைய ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ii. மிகவும் வறுமை நிறைந்து அதிலிருந்து மீளமுடியாத சமூகத்தில் வளரும் பிள்ளைகளில் இத்தகைய ஆளுமை வளர்வதும் அவதானிக்கப்பட்டது.

iii. சமூகச்சூழ்நிலை

அ. இடம்விட்டு இடம்மாறி, மாறுபட்ட மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் கொண்டவரிடையில் வாழ நேரிடும் போது ஏற்படும் பல்வகைப் பிரச்சனைகள் இத்தகைய ஆளுமையை ஏற்படுத்துகின்றன.

ஆ. குடிசைப்பகுதியில் (Slum) வாழ்வோருக்கிடையில் இத்தகைய ஆளுமை காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இ. வறுமை, கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை, கல்வியறிவின்மை, இடநெருக்கடி போன்ற சமூகக்காரணிகளும் காரணமாகின்றன.

ஈ. சமூக அந்தஸ்து இழந்து சாதி வெறிக்கு ஆளாகி வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்படும் போது நல்லது, கெட்டது எதுவெனச்சிந்திக்க முடியாத நிலையில் மனிதன் இத்தகைய நிலைக்கு ஆளாகின்றான்.

உ. போரினால் ஏற்படும் சீர்குலைவுகள் இவற்றிற்குக் காரணமாய் அமைகின்றது. (நாட்டுச் சூழல்)

**காலமும் நேரமும் மனிதனுக்காக காத்திருப்பதில்லை.**

## 5. குடும்பச் சூழ்நிலை

i. பெற்றோரிடையே காணப்படும் கருத்து வேறுபாடு, சண்டை சச்சரவுகள், விவாகரத்து

ii. தாயோ தந்தையரோ இருவருமோ மரணமடைதல்.

iii. பெற்றோர் குழந்தைகளிடம் காட்டும் வெறுப்பு, இரக்கமற்ற தன்மை, பெற்றோரின் ஒழுக்கக் குறைபாடுகள் என்பன.

iv. ஆதரவற்று அநாதரவாக அநாதை விடுதிகளில் வாழநேரிடுதல்.

v. வீட்டு குடும்ப வறுமையினால் ஏற்படும் மனக்கவலைகளில் இருந்து விடுவபட களவு, கொலை போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

# தடுக்கும் வழிமுறைகள்

1. இத்தகைய ஆளுமையில் ஈடுபடுவோரை கண்காணித்து அவர்களைச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்த்து நல்ல கல்வியறிவும் பிற்கால நல்வாழ்க்கைக்கான பல்வகைத் தொழிற்பயிற்சிகளையும் வழங்குதல்.


2. இச்சமூகவிரோத ஆளுமை இளம்பராயத்தில் தோன்றி மனதில் பதிவதால் பெற்றோர் குழந்தைகளை சிறந்தமுறையிலும் அவதானமாகவும் வளர்க்கவேண்டும். குழந்தைகளின் மனதிலும் நல்உணர்வுகளும் மகிழ்ச்சியும் நிறைந்து வளரத் தேவையான சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும்.

3. குழந்தை எதிர்காலத்தில் ஒழுக்கமும், நீதியை மதித்து நடக்கும் குணமும் உடையவர்களாக வளர்வதற்கு நல்ல வழிமுறைகளைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

உதாரணம்: இதனை பாடசாலைகள், ஆலயங்கள், சாரணர் பயிற்சி என்பவற்றின் மூலமாக ஏற்படுத்தலாம்.

4. சமூகவிரோதக் குணங்கள் சிறுவர்களிடம் தலைநீட்டும் போது அவற்றை முளையிலேயேகளைய வேண்டும். எவரும் ஒரே நாளில் சமூகவிரோத ஆளுமை கொண்டவர்களாக மாறுவதில்லை. இதற்கு சுற்றுப்புறம், சூழ்நிலை, கெட்டவர்களின் சேர்க்கை போன்றவை காரணமாக அமைகின்றன. இவற்றைத் தகுந்த முறையில் மாற்றியமைப்பதனூடாக இதனைக் களையலாம்.

தொடர்ச்சி 36ம் பக்கம்..





# வெற்றியின் விடியல்

## காலை 7 மணியாகும் போது வணக்கம் நேயர்களே...! இன்றைய நாளும் உங்களுக்கு மகிழ்சிகரமான நாளாக அமைய வெற்றியின் விடியல் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கின்றோம்.... என ஒரு குரல்..

ஒவ்வொரு சாதாரண மனிதர்களின் அன்றாட பணிகள் காலை வேளையிலேயே உத்தியோக பூர்வமாக் ஆரம்பமாகின்றன அவ்வாறு ஆரம்பிக்கும் பணிகள் அவனுக்கு திருப்திகரமானதாக அமையும் பட்சத்திலும் பரபரப்பான அந்த நேரத்தில் மனதுக்கு மகிழ்ச்சியை தருவதாகவும் அமைந்து விட்டால் அன்றைய நாள் முழுவதும் அவன் மேற்கொள்ளும் பணிகள் வெற்றிகரமானதாகவும் திருப்திகரமானதாகவும் அமைந்துவிடும். அன்றையதினம் அவனின் தினமாகவே அமைந்துவிடும்.

அது போன்றே வானொலிகளின் நிகழ்ச்சிகள் 24 மணித்தியாலங்களாக இருந்தாலும் அவர்களின் உத்தியோகபூர்வ செயற்பாடுகள், நிகழ்ச்சிகள் அனைத்தும் காலைநேர நிகழ்ச்சிகளில் இருந்தே ஆரம்பிக்கின்றன. மக்களை கவரும் வித்திலும் அவர்களின் பரபரப்பான மனநிலையை சிதைக்காமல் தெளிவாக அன்றைய தினத்திற்கு அழைத்து செல்லும் பெரும் பணி வானொலிகளின் காலை நேர நிகழ்ச்சிக்கு இருக்கின்றது. அந்த உன்னதமான பணியை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்கிறது இதயத்தின் நாதம் வெற்றியின் காலை நேர நிகழ்ச்சி படைப்பான விடியல் நிகழ்ச்சி.

மூன்று மணித்தியாலங்கள் பயணிக்கும் விடியல் பயணத்தில் கிடைக்கும் விடயங்கள், பலன்கள், சுவாரஸ்யங்கள் என்பன பற்றி இங்கு பகிர்கின்றோம். உலகம் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருவதையே பொதுவாக விடியல் என்போம். அது தமிழர்களை பொறுத்தவகையில் முக்கியமானதொன்றாகவே மாறிப்போய்விட்டது. தினசரி வேலைச் சுமைகள், இதர கஸ்டங்கள் என்பவற்றினால் அவர்களின் மனம் உடல் அனைத்தும் இரவாகும் போது இருளடைந்து சோர்வடைந்து விடுகின்றது. இந்த சோர்வை மாறுநாளும் தொடர விடாமல் தேவையான ஆக்கபூர்வமான சக்தியை செவிவழியாக மனதுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களின் உடல் சார் செயற்பாட்டை உற்சாகப்படுத்தி தினம் தினம் விடியல் தருவதே வெற்றியின் விடியல் நிகழ்ச்சியாகும்.

காலை 7 மணியாகும் போது வணக்கம் நேயர்களே...! இன்றைய நாளும் உங்களுக்கு மகிழ்சிகரமான நாளாக அமைய வெற்றியின் விடியல் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கின்றோம்.... என ஒரு குரல் வானலையின் ஊடாக இல்லங்கள் தோறும் ஒலிக்கும். இலங்கையின் முதல்நிலை அறிவிப்பாளரும் கம்பீரமான குரலுக்கு சொந்தக்காரருமான திரு A.R.V. லோஷன் அவர்களின் குரலும் அவ்வாழ்த்தும் இணைந்து தரும் உற்சாகம் இருக்கிறதே அது சொல்லிலடங்காது. காலைவேளைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் ஒரே பார்வையில் கொண்டுவந்து சேர்க்கும் முதல் மணித்தியாலம் வெற்றியின் விடியலில் சிறப்பம்சமாக விளங்குகின்றது. அலுவலகத்திற்கு செல்வோர், பாடசாலைக்கு செல்வோர் என அனைத்து தரப்பினரும் தினந்தோறும் எதிர்பார்க்கும் நேரமாக இந்த ஒரு மணித்தியாலம் அமைகின்றது.

தினசரி இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் முடிவுகள், போட்டி விபரங்கள் என்பவற்றுடன் கிரிக்கட், உதைபந்தாட்டம், டெனிஸ் என காலத்திற்கேற்ப அனைத்து விளையாட்டு தகவல்களையும் ஒரே நோக்கில் கொண்டு வந்து சேர்க்கின்றது விடியலின் விளையாட்டு வலம்.

உலகின் எந்த மூலையிலும் நடக்கும் அனைத்து விளையாட்டு தகவல்களையும் உடனுக்குடன் கொண்டு வந்து பகிர்வதில் முக்கிய இடம் வகிப்பவர் லோஷன் அவர்கள். அவரின் வழிகாட்டலில் வெற்றிக்குழு இந்நிகழ்ச்சி பகுதியை சிறப்பாக தயாரித்து முன்னெடுத்து செல்கின்றது.

விளையாட்டு வலத்தை தொடர்ந்து நகைச்சுவை உணர்வுடன் பாரபட்சமின்றி அனைத்து தரப்பினரையும் கிண்டலடித்தும் சிலாகித்தும் சுவாரஸ்யமான சிறு விவாதங்களை முன்வைத்தும் தினசரி பத்திரிகைகளின் செய்திகளை நேயர்களிடம் கொண்டு வந்து சேர்க்கின்றார் பேப்பர் தம்பி. அவரின் குரலும் குறும்பான பேச்சு நடையும் பலரைக் கவர்ந்து இழுத்து விட்டது எனலாம். இன்று பலர் தம் பணிகளுக்கு அவசரமாக செல்வதற்கு முன்னர் இப்பகுதியை கேட்காமல் செல்வதில்லை என்பது அவர்கள் தரும் ஆதரவின் மூலம் புலப்படுகின்றது.

இதனை தொடர்ந்து அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பகுதிகள் நிகழ்ச்சியை அலங்கரித்து செல்கின்றன.

உலகம் தற்போது இணையத்தினுள் அடங்கி விட்டதாலும் எந்த தகவலையும் இணையம் உடனுக்குடன் பெற்றுத்தரும் என்பதாலும் இணையத்தளங்கள் மக்களுக்கு தேவையான ஒன்றாக இருக்கின்றன. அவ்வாறாக மக்களுக்கு பயன் தரும் இணையத்தளங்களை அறிமுகப்படுத்தும் நாளொரு தளம் பகுதி 7.30 மணியளவில் விடியலில் வந்து சேர்கின்றது. கல்வி. விளையாட்டு. அரசியல், விஞ்ஞானம் என்பவற்றுடன் பிரபலமான வலைத்தளங்களையும் அறிமுகப்படுத்தி வைக்கும் இந் நிகழ்ச்சி பகுதியானது இணைய ஆர்வலர்களின் பாராட்டுகளை வென்றெடுத்துள்ளது.


வர்த்தகர்களின் செல்வாக்கான பகுதி பங்குச்சந்தை, அவர்களின் முதல்கள் முதலீடாக்கப்பட்டு அதன் மூலம் வரும் வருமானங்கள் பற்றி அறிவதற்கிடையில் வர்த்தகர்கள் பலர் தம் வேலைப்பழுக்களுக்கு மத்தியில் பெரும் கஸ்டங்களுக்குட்படுகின்றனர். இந்நிலையியை போக்குவதற்கென பங்குச்சந்தையின் நாளாந்த விடயங்களை தினசரி பெற்றுத்தருவதாக அமைகின்றது பங்குச்சந்தை நிலவரம் என்ற நிகழ்ச்சிப்பகுதி இந்த நிகழ்ச்சி பகுதியினால் வர்த்தகர்கள், பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் அனைவரும் இருந்த இடத்திலிருந்தோ, பயணத்தின் போதோ,

அல்லது வேறு பணிகளில் இருந்து கொண்டோ பங்குச்சந்தையில் அன்றைய தினத்தில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்கின்றனர்.



தினந்தோறும் உலகெங்கும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெறும். அதனோடு தொடர்புபட்டவர்கள் பலரிருப்பர். அவர்கள் அன்றைய தினம் முழுவதும் மக்களனைவராலும், ஊடகங்களினாலும் பேசப்பட்டுக் கொண்டிருப்பர். அவ்வாறானவர்களில் அதிகமாக பேசப்பட்டவர் யார் என்பது ஒரு சுவாரஸ்யமாக தேடலாக இருக்கின்றது. இது எமக்கு மிகவும் பிடித்துப் போன விடயமும் கூட. ஆகவே விடியலில் நேற்றைய நாளின் நிஜ பிரபலம் என்ற நிகழ்ச்சி பகுதியானது இலங்கை உட்பட உலகெங்கும் முதல் நாளில் அதிகம் பேசப்பட்ட நபரையும் அவர் எதற்காக பேசப்பட்டார் என்பதையும் நேயர்களுக்கு தெரியப்படுத்துகின்றது. அத்தோடு அந்த நபர் யாராக இருக்கும் என்ற கேள்வியை நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே நேயர்களிடம் முன்வைத்து அவர்களையும் ஆர்வமாக பங்குபற்ற வைத்து நிகழ்ச்சியில் இணைக்கும் அறிவிப்பாளரின் சூட்சும பணி மெச்சத்தக்கது. இப்படியான பயனுள்ள நிகழ்ச்சித் தயாரிப்புகளின் ஊடாகவும் மட்டுமின்றி காலைவேளைக்கு உகந்த உற்சாகம் தரும் அனைத்து தரப்பினரையும் கவரும் பாடல்களையும் கொண்டு விடியலின் முதல் மணித்தியாலம் வெற்றியாக கழிகின்றது.

அடுத்து வரும் 2 மணித்தியாலங்களும் முழுக்க முழுக்க நேயர்களின் மணித்தியாலங்களாகவே பயணிக்க ஆரம்பிக்கின்றது. இந்த பயணத்தின் ஆரம்பத்திலேயே இன்னொரு கதாநாயகன் அறிமுகமாகின்றார். விடியல் நிகழ்ச்சிக்கு அறிவிப்பாளர் லோஷன் ஒரு கதாநாயகன் என்றால் அவரின் எண்ணத்தில் உருவான கஞ்சிபாய், அவரின் மனைவி, மகன் இவர்களோடு நண்பர்கள் ஆகியோர் இன்னொரு கதாநாயகர்களாகின்றனர். சிறப்பாக தெரிவு செய்யப்பட்ட நகைச்சுவைகளை நேயர்களுடன் பகிர்ந்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து காலைப்பொழுதின் அதாவது முதல் மணித்தியாலத்தின் பரபரப்பை சுமுகமாக்கும் பணியை கச்சிதமாக கஞ்சிபாய் நிறைவேற்றுகின்றார். எந்த கஸ்டத்திற்கும் தீர்வு சிறந்த நகைச்சுவையே என்பதை உணர்ந்து இப்பகுதியை தயாரித்த விதம் பாராட்டுதலுக்குரியதே.




இன்னொரு கதாநாயகர்களாகின்றனர். சிறப்பாக தெரிவு செய்யப்பட்ட நகைச்சுவைகளை நேயர்களுடன் பகிர்ந்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து காலைப்பொழுதின் அதாவது முதல் மணித்தியாலத்தின் பரபரப்பை சுமுகமாக்கும் பணியை கச்சிதமாக கஞ்சிபாய் நிறைவேற்றுகின்றார். எந்த கஸ்டத்திற்கும் தீர்வு சிறந்த நகைச்சுவையே என்பதை உணர்ந்து இப்பகுதியை தயாரித்த விதம் பாராட்டுதலுக்குரியதே.

மக்களோடு ஆலோசிப்பதற்கும் அவர்களின் கருத்தை கேட்பதற்கும் பல்வேறு விடயங்கள் இருக்கின்றன. இருப்பினும் அவையனைத்தும் பயன்தருபனவாக அமைந்து விடாது. ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட மன எண்ணங்களை கொண்ட பலரை ஒன்றிணைத்து ஒரு தலைப்பின் கீழ் அவர்களின் கருத்துகளை கொண்டு வருவதென்பதும் அவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதென்பதும் கடினமான காரியமே. நிகழ்ச்சித் தலைப்புகளை தேர்ந்தெடுக்கும் போது தொலைநோக்கு பார்வை நிச்சயம் இருக்க வேண்டும். இல்லையேல் அந்த கருத்து பரிமாற்றம் பிரயோசனமற்று போய் விடும். காலமறிந்து இடமறிந்து கருத்து பரிமாற்றுதல் என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது. இதனை தெளிவாக உணர்ந்து

கொண்டு பயன் தரும் தலைப்புகளை முன்வைத்து அவற்றினூடாக நேயர்களின் சிந்தனையாற்றலை அதிகரிக்க செய்து அவர்களை தம் கருத்துகளை முன்வைத்து உலகறியச் செய்யும் நிகழ்ச்சியாக விடியல் காணப்படுகின்றது. நேயர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் அவர்களின் மனநிலையை வெளிப்படுத்திநிற்கும் ஆகவே அவர்களின் மனநிலையை புரிந்து அவர்களின் மனநிலையை வெளிப்படுத்தி நிற்கும். ஆகவே அவர்களின் மனநிலையை புரிந்து கொண்டு கருத்துகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுதல் என்பது கடினமான காரியமாகும் (புலி வாலை பிடிக்கும் செயற்பாடாகும்) ஒரு கருத்து வெளியில் கூறப்படும் போது எண்ணத்தில் தோன்றியதற்கு புறம்பானதாக மாறி விடலாம். இது சில வேளைகளில் பெரும் சிக்கல்களையும் கொண்டு வந்து விடும். ஆகவே மிகவும் நுணுக்கமான இந்த பணி உளவியலோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது. இந்த பரிமாற்றலை செவ்வனே செய்யும் அறிவிப்பாளர் அவர்கள் பாராட்டுதலுக்குரியவராவார். நேயர் ஒருவர் நகைச்சுவையுணர்வுடன் கூறுகின்றாரா அல்லது ஆழமாக அவ்விடயத்தினுள் சென்று கருத்தை முன்வைக்கிறாரா என்பதை தெளிவாக உணர்ந்து அவர்களில் ஒருவராக நின்று அவர்கள் கருத்துகளை வானலையில் பரவ செய்வதுடன் தன் கருத்துகளையும் தார்மீக உணர்வுடன் தெரிவிக்கும் அவரின் சாமர்த்தியம் பலரின் பாராட்டுகளை வென்றெடுத்ததுடன் பல நேயர்களையும் சம்பாதித்துள்ளது.

அத்தோடு வியாழன் விடியல் பல கேள்விகளின் ஊடாக தெளிவான விளக்கங்களை பொறுத்தது அறிவை மேம்படுத்துகின்றது தேடலை வளப்படுத்துகின்றது.

அடுத்து நிகழ்ச்சியை அலங்கரிக்கின்ற சிறந்த அழகான பாடல்கள். அர்த்தமுள்ளதும், தமிழை மோசமாக கொச்சைப்படுத்தாததும் நேயர்களால் அதிகம் விரும்பப்பட்டதுமான சிறந்த இசை, வரிகள், மொட்டு என்பவற்றை ஒருங்கே கொண்ட பாடல்கள் பழைய பாடல்களாகவோ இடைக்கால 'பாடல்களாகவோ புதிய பாடல்களாகவோ நம்நாட்டு பாடல்களாகவோ இருந்தாலும் அவை அனைத்திற்கும் சமசந்தர்ப்பம் கொடுப்பது என்பது வெற்றியின் தனிச்சிறப்பாகும்.

அவ்வகையில் காலை வேளைக்கு பொருத்தமான பாடல்களை திறம்பட தெரிவு செய்து தேவையான சிறு சிறு விமர்சனங்கள், அறிமுகங்கள் என்பவற்றையும் சேர்த்து ஒலிபரப்புவதன் ஊடாக வெற்றியின் விடியல் ரம்மியமாக மனதில் இடம் பிடித்து விடுகின்றது. ஒரு காலத்தில் கேட்ட பாடல்களை பின்னர் கேட்கத் தவறியிருப்போம். நேரமின்மை, மறதி என்பன இதில் செல்வாக்கு செலுத்தும். ஆனால் மனதில் நிலைத்திருந்து மெல்ல மெல்ல நீங்கி செல்லும் பாடல்கள் பலவற்றை மீள ஞாபகமூட்டும் நிகழ்ச்சியாகவும் விடியல் காணப்படுகின்றது.

அத்தோடு பல்வேறு புதிய பாடல்கள் வந்தாலும் அவையனைத்தும் சமூக பார்வைக்கு உகந்ததாக இருப்பதில்லை. ஆகவே சமூக பார்வைக்கு உகந்த பாடல்களை தெரிவு செய்து ஒலிபரப்பி நேயர்களின் மனங்கோணாமல் பார்த்து வருகின்றது வெற்றியின் விடியல் நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக மூன்று மணித்தியால பயணத்தை சிறப்பாக மேற்கொள்ளும் விடியல் காலை 10 மணியாகும் போது தன்னோடு இணைந்திருந்த நேயர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தி அன்றைய நாளுக்கான சிறந்த அடித்தளத்தை இட்டுச்செல்வதுடன் அனைத்து செயற்பாடுகளுக்கும் உந்து சக்தியை வழங்கி செல்கின்றது.

காலை நேர சிந்தனையை சிறப்பாக்கும் பணியை வானொலிகள் செய்து வந்தாலும் இடையிடையே ஏற்படும் சலிப்பு தன்மைகள் நேயர்களை பாதிக்கும். ஆனால் ஆரம்பம் முதல் இன்று வரை எந்த சலிப்புகளுக்கும் இடம் கொடாமல் மக்கள் மனதில் இடம் பிடித்து அன்றைய நாளுக்கான விடியலை உண்டாக்கி பிரகாசம் தரும் நிகழ்ச்சியாக வெற்றியின் விடியல் விளங்குகின்றது.

**ஒவ்வொரு விடியலும் எமது ராஜாங்கமே..**

## வானில் வண்ணங்கள்...

பூமியின் தட்டடுக்குகளில் ஏற்படும் திடீர் மாற்றத்தால் பூகம்பம் ஏற்படும். இவையெல்லாம் உறுதியாக வரும் என்று கூறமுடியவில்லை.

அழிவைத் தடுப்பதற்கு தற்போதைய ஒரே வழி, வானில் வண்ணம் தோன்றினால், அனைத்து டிரான்ஸ்பார்மர்கள், சாட்டிலைட் இணைப்புகளை நிறுத்திவிட வேண்டும்.

வெப்பக்காற்றில் தாக்கம் குறையும் வரை இவ்வாறு செய்தால் சூரியனின் தாக்கத்திலிருந்து தப்பிக்கலாம். இதுகுறித்து காந்திகிராம் கிராமிய பல்கலை இயற்பியல் பேராசிரியர் சிவராமன் கருத்தரங்கில் கூறுகையில், "விஞ்ஞான ஆய்வுகளில் கூற்றும், புராணத்தில் கூறப்படும் கதைக்கூற்றும் ஒரே மாதிரியாக உள்ளது. இது அப்படியே நடக்கும் என்று கூறப்படும் கதைக்கூற்றும் ஒரே மாதிரியாக உள்ளது. இது அப்படியே நடக்கும் என்று கூறமுடியாது. சூரியனின் வெப்பக்கதிர்களை தொடர்ந்து ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள், சூரியகாற்றின் பேராற்றலை கண்டுபிடித்துள்ளனர். 1989லேயே இப்பிரச்சனை தோன்றியதால், அதை சமாளிக்கும் வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இதுகுறித்து பயப்படவும் வேண்டாம்." என்றார்.

---

## சமூகவிரோத...

5. சட்டரீதியான அணுகுமுறை

இதனால் ஏற்படும் தண்டனை பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குவதனால் தயங்கி தயங்கி இத்தகைய ஆளுமையில் ஈடுபடுவோரை நிச்சயமாகத் திருத்த முடியும்.

6 வேலை வாய்ப்பு

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி பொருளாதார முன்னேற்றம் காண வழிவகுப்பதால் சமூகவிரோத ஆளுமையை ஓரளவு தடுக்கலாம்.

7. நாணயமான, ஸ்திரமான அரசாங்கம்

இதனால் சமூகவிரோத ஆளுமை பெருமளவு குறைக்கப்படும்.


References:-

1. Zeigrnik B.V (1986) Abnormal Psychology, MGU Press, Mosscow.
2. வைத்தீஸ்வரன் கா. வளரிளம்பருவம் கீதா பப்ளிகேசன் கொழும்பு (2005)
3. Robbin R.R.Personality and Psychosometice illiness (1969)

கொழும்பு - 99.6

கண்டி , யாழ்ப்பாணம் - 101.5

ஊவா , தென்கிழக்கு - 93.6

வடக்கு , கிழக்கு - 93.9

நாடு முழுவதும் - 106.7

Vettri FM

இதயத்தின் நாதம்

Vettri TV

*The lifestyle of people*

# UHF 46

universal networks


Published By :- **ATA** Publication Tel : 077- 4939756